வருஷச்சந்தா ரூ. 1 8 0. ஸஞ்சிகை [11

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

'ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷிணீ'

(மாதப் பத்திரிகை.)

OFFICE OF ... 5-JAN 1937 ... MADRAS

பத்திரிகாதிபர்:— A. V. கோபாலாசாரியர், M.A.,B.L.,
...சிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபை அக்ராஸநாதிபதி)
... ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபையாரால்
பிரசுரம் செய்யப்படுவது.
1936-ஞு நவம்பர்-மீ [கார்த்திகை-மீ

JL
Q2m211, N35SS
N136·2.11.
189100

விஷயம்.

1.	தயாசதகம்	[தொடர்ச்சி]	117—136
2.	கோதாஸ்துதி	[தொடர்ச்சி]	27—30
3	ரக்ஷாவிமர்சம்	[தொடர்ச்சி[	5—12

விஜ்ஞாபனம்.

'ஸ்ரியா ஸஹ தா₃ம்பத்யம்' என்னும் ந்யாயஸித்தாஞ்ஜந ச்லோகம் மிகவழகு. ஸாமாந்யமாக தம்பதிகளால் சேர்ந்து செய்யவேண்டிய கர்மத்தையும் யுக்மபாவத்தையும் தாம்பத்யசப்தம் சொல்லும். தம்பதிகள் செய்யவேண்டிய அக்நிஹோத்ராதி கர்மங்களைச்சொல்லும் என்று வாசஸ்பத்யம். பத்யந்தமான சப்தம். 'கர்மம்' என்னும் அர்த்தத்திலும் 'யக்' என்னும் விகுதி. யக்ஞதீக்ஷை, தானம், ப்ரஜாரக்ஷணம் முதலியவை தம்பதிகர்மம். மோக்ஷதானம், ரக்ஷாதீக்ஷாநிர்வாஹம், உலகத்தைத் தாங்குவது முதலியவை இங்கே தாம்பத்யமான கர்மம். 'தா₃ம்பத்யாய உமாம் ஸதீம்'. நிஷ்ப்ரத்யூஹ சாச்வதப்ரணயத்திற்காக பார்வதியின் உபாஸநம். முன்பே தம்பதியாயிருப்பவர், இந்த தாம்பத்யத்தை ப்ரார்த்திக்கலாம். புதுவிவாஹ ப்ரார்த்தனையாகாது. 'து' என்பது பக்ஷாந்தரங்களைத் தள்ளுகிறது. 'லக்ஷ்மீ' என்பது பெருமாளுடைய ஓர் ஸ்திரீவிக்ரஹம், சேதனாந்தரமேயல்லாத அசேதனமான ஒரு பொம்மை. இந்தப் பொம்மையோடு பெருமாளுக்கு தா₃ம்பத்யம். அந்தப் பொம்மைவிக்ரஹத்தில் பெருமாளைத்தவிர வேறு ஆத்மாவேயில்லை. ஒரு ஆத்மாவே இரண்டு விக்ரஹங்களாகக்கூடி தம்பதி இது ஐக்யபக்ஷம் அந்தப் பக்ஷப்படி பொம்மையோடு தா₃ம்பத்யமல்ல; ஸ்ரீயென்னும் சேதநப்பெண்ணோடுதான் தா₃ம்பத்யம் சாச்வதம். ஸீதையின் தங்கப்பதுமையை வைத்துக்கொண்டு தம்பதிகார்யமான அச்வமேதம் நடந்தது போலல்ல. தாம்பத்யம் கிம் ரூபம் என்பதை விளக்க தாம்பத்யத்தை உத்தேசித்து 'ஸ்ரீரூபவ்யக்த்யந்தரம் விநா ஏகவ்யக்திவிக்ரஹத்வய ஸஹிதம்' என்று ஐக்யபூர்வபக்ஷி விதித்தார். அதை 'தாம்பத்யம்' என்று அநுவதித்து அது ஸ்ரீயென்னும் சேதநவ்யக்த்யந்தரத்தோடு ஸஹ தான் என்று ஸித்தாந்தவிதானம். தாம்பத்யம் உத்தேச்யம். ஸ்ரியா ஸஹ

(ப-ரை) க்ருபெ - தயாதேவியே! த்வயா பாலயத꞉ - உன்னை யஜமானியாகக்கொண்டு உன் வசமான, வ்ருஷகிரீசிது꞉ - வேங்கடத்தரசனுடைய, க்ரீடிதம் - விளையாட்டு, அசேஷத꞉ - முழுவதும், ஜகத்தி₄தம் - உலகத்திற்கு ஹிதமே (நல்லதே), ததி₃த₃ம் - அப்படிக்கொத்த இந்த (உண்மை), மது₄மத₃ - மத்யபானமயக்கமென்கிற சாக்கைக் கொண்டு, வ்யபோட₄ - (நினைப்பிலிருந்து) நழுவிய, ப்ரணததோ₃ஷத்₃ருஷ்டி꞉ - ஆஸ்ரிதர் குற்றக் கவனிப்புக்களையுடையதும், ஹத ப்ரப₃லதா₃நவை꞉ - மிக்க பலமுடைய அஸுரரைக் கொல்லுவதுமான, ஹலத₄ரஸ்ய - கலப்பையை உடைய பரசுராமனுடைய, ஹேலாஶதை꞉ - நூற்றுக்கணக்கான லீலைகளால், ஸமர்த்யதே - உண்மையென்று நிரூபிக்கப்படுகிறது.

"அம்மா தயையே! உன்னை யஜமானியாகக்கொண்டு வேங்கடமலையரசனுடைய விளையாட்டெல்லாம் (லீலையான உலகவ்யாபாரம்) ஒன்று தவறாமல் முழுவதும் நன்மையேயாகும். மத்யமயக்கமென்கிற வ்யாஜத்தை வைத்துக்கொண்டு ஆச்ரிதர்களுடைய குற்றங்களைக் கவனியாமல் நினைப்பிலிருந்து நழுவவிடுவதும் பொல்லாவஸுரர்களை மாய்ப்பதுமான பலராமருடைய நூற்றுக் கணக்கான விளையாட்டுகளால் இந்த உண்மை உறுதி செய்யப்படுகிறது".

(தா-ம்) எந்த அவதாரத்தில் தயை என்பதே இல்லை என்று நாம் நினைக்கக்கூடுமோ, அந்த அவதாரத்தில் வ்யாபாரங்களும் தயாமயங்களென்று நிரூபித்தால்தான் தயையின் சக்தி எங்கும் ப்ரஸரிக்கும் என்பது தெளிவாகும். கொடுமையையே வ்ரதமாகக் கைப்பற்றி க்ஷத்திரியப் பூண்டே யில்லாமல் கொலை செய்து வந்த பரசுராமருடைய கோரமான கொலைச்செயல்கள் கூட கொல்லப் பட்டவர்களுடைய ஆத்மாவிற்கு ஹிதமானதாலவரையும் தயா ப்ரவாஹமென்று நிரூபித்தார். முன்ராமர் (முதல் ராமர்) விஷயத்தில் அப்படி நிரூபிக்கப்பட்டது. முன் ராமர் கோபத்தால் மத்தர். அவர் கோபமதத்திற்கு ஓய்வில்லை. இந்தப் பின்ராமர் மதத்தால் ஸதாகாலமும் மத்தர். மத்யத்திற்கு 'ஹாலா' என்று பெயர். இவர் ஹாலையை விடாதவர், அதை அவர் ஓர் ஓயாத

வ்யஸநமாக உடையவர். 'ஹித்வா ஹாலாம்' என்கிற மேகதூத ச்லோகத்தில் ஹாலையை விட்டுவிட்டு (பாரதப்போரில் இருதிறத்தாரும் பந்துக்களாக இருந்ததையிட்டு) பந்துப்ரீதியினால் தீர்த்த யாத்திரை போய் தர்மத்தைச் சரித்துக்கொண்டு சுத்தராய் புண்யத்துறைகளாடினார் என்று வர்ணித்தார். இவர் மத்யபாநத்தை விட்டு தீர்த்தயாத்திரை செய்தது ஓர் பெரிய ஆச்சர்யமென்று அங்கே மஹாகவி வேடிக்கையாகக் காட்டினார். இவர் மத்தர்போல நடித்ததெல்லாம் பிறர் குற்றங்களைக் கவனியாமல் இருப்பதற்கு ஓர் சாக்காயிற்று என்று இங்கே வர்ணநம். துர்யோதநனுடைய கோடி தோஷங்களையும் இவரைக் கவனியாமலிருக்கச் செய்தது தயை. (89)

> ப்ரபூதவிபுதத்விஷத்பரணகி2ந்நவிச்வம்பரா
> ப4ராபநயநச்ச2லாத் த்வமவதார்ய லக்ஷ்மீத4ரம் ।
> நிராக்ருதவதீ த3யே நிக3மஸௌத4தீ3பச்ரியா
> விபச்சித3விகீ3தயா ஜக3தி கீ3தயாந்த4ம் தம: ॥ ௮௯ ॥

> ப்ரபூதவிபுதத்விஷத்பரண கிந்நவிச்வம்பரா
> பராபநயநச்சலாத் த்வமவதார்ய லக்ஷ்மீதரம் ।
> நிராக்ருதவதீ தயே நிகமஸௌததீபச்ரியா
> விபஶ்சிதவிகீதயா ஜகதி கீதயாந்தம் தம: ॥ (89)

(ப-ரை) தயே - தயையே! ப்ரபூதவிபுதத்விஷ: - ஏராளமான(அநேக)தேவசத்ருக்களான அஸுரர்களை, பரண - சுமப்பதால், கி2ந்ந - வருந்தின, விச்வம்பரா - பூமிதேவியினுடைய பர - பாரத்தை, அபநயந - நீக்குவதென்கிற, ச2லாத் - வ்யாஜத்தினாலே, (சாக்கை வைத்துக்கொண்டு), த்வம் - நீ, லக்ஷ்மீதரம் - லக்ஷ்மியைத் தரிக்கும் பெருமாளை, அவதார்ய - அவதாரம் பண்ணும்படி செய்து, நிகம - வேதங்களுடைய, ஸௌத - மேலுப்பரிகையான உபநிஷத்துச்சியை ஏறியடைய, தீபச்ரியா - வழிகாட்டும் திருவிளக்கு நாச்சியார் போன்றதும், ஜகதி - பூமண்டலம் முழுவதிலும், விபச்சித் - வித்வான்களொருவராலும், அவிகீதயா - தப்பென்று சொல்லப்படாததும், (எல்லாத்தேசங்களிலும், எல்லா வித்வான்களாலும் ஏகமதியாகப் புகழப்படுவதுமான) கீதயா - கீதையால் (கீதை பாடியதால்), அந்தம் தம: - கன் [illegible] நிராக்ருதவதீ - போக்கினாய்.

18190

“அம்மா தயையே! தேவர்களை (ஸாத்விகரான ஸாதுக்களை) தீவ்ரமாக த்வேஷிப்பதையே விரதமாகக்கொண்ட கணக்கில்லாத அஸுரர்களை (அஸுர ஸ்வபாவமுடைய கொடியவர்களை)ச் சுமப்பதினால் பாரம் பொறுக்க முடியாமல் வருந்தின பூமிப்பிராட்டியின் பாபச்சுமையை நீக்கி, பாரத்தை லகுவாக்குவதென்று மேலுக்கு ஒரு சாக்கை வைத்துக்கொண்டு, நீ லக்ஷ்மியோடுகூடிய பெருமாளை உலகத்தில் அவதரிக்கும்படி செய்து, வேதங்களின் மேல்மாடி(உச்சி)யை அபாயமில்லாமல் ஏறுவதற்கு திருவிளக்கு வெளிச்சம்போன்ற உலகம் முழுவதிலும் எல்லார்க்கும் அவிகீதமான (நன்று நன்றென்று மதியுடையோரெல்லோராலும் ஏககண்டாய்க் கொண்டாடப்படும்) கீதை கானத்தால் மதியைஇருளச்செய்யும் தமஸை(அக்ஞான இருளை)ப்போக்கினாய்.

ரஹஸ்யத்ரயங்களிலும் சரணாகதியென்றும் ஏழைக்கெளிய உபாயத்தை விதித்து, அஞ்சலஞ்சல், துயரப்படாதே, உன் சுமையை நான் சுமக்கிறேன், உன் க்ஷேமம் என் பாரம், உன் பாரத்தை நான் அபநயனம்செய்கிறேன் என்று அபயப்ரதானம் செய்வதை விளக்கும் சரமச்லோகத்தையும், அதை முடிவாகக் கொண்ட எல்லாக் காலங்களிலும் எல்லாத் தேசங்களிலும் ஒருவர் பாக்கியன்னியில் எல்லா ப்ராக்ஞர்களாலும் ஒருமிக்க அழகு அழகு என்று கொண்டாடப்பட்டுவரும் கீதையையும் பாடி சாச்வதகாலமும் சப்தஜ்யோதியாக (ஞானவிளக்காக) பிரகாசிக்கும்படி அகண்ட தீபமேற்றிவைத்ததிலும் உயர்ந்த கருணை உண்டோ? கிருஷ்ணாவதாரத்தின் ப்ரயோஜனமிதுவே. கருணை காஷ்டை இதுவே. பூமிப்பிராட்டி பாபிகளின் பாபச்சுமையைத் தாங்கமாட்டாமல் அழுதாள்; அவள் பாரத்தைப்போக்க, அவள் அழுகையைத் தீர்க்க உலகத்தில் கண்ணனாக அவதரித்ததென்று சொல்லுவதெல்லாம் மேலுக்கு ஓர் சாக்கான பேச்சு. அவளுடைய ப்ரபூதமான (தாங்கமாட்டாத) பாபச்சுமையைப் போக்க அவதரித்ததாக மேலுக்குச் சொல்லிக்கொண்டு, உண்மையில் குழந்தைகளாகிய நம்முடைய தூக்கமாட்டாத பாபச்சுமையை நீக்கவும், நம் அழுகையைத் தீர்க்கவும் தான். ப்ரபு லக்ஷ்மியையும் கூட்டிக்கொண்டு அவளை மார்பில் சுமந்து அவதரித்தது. 'ஜனங்களின் சோகத்தைத் தெறிக்கச்செய்யும் ச்லோகம் (அமிர்தம்) எந்தக் கருணைக்கடலிலிருந்து ஸ்வயம் அவதரித்ததோ' என்று

சரமச்லோகத்தின் அவதாரத்தை வர்ணித்துளர். வால்மீகியின் சோகம் ச்லோகமாயிற்று என்பர். கண்ணன் ச்லோகம் சோகத்தைத் தொலைப்பது. கீதையென்பது ஓர் சாச்வத அகண்ட ஞான தீபம். எம்மதத்தரையும் ரஞ்சனம் செய்வது. சப்தம் என்னும் வெளிச்சமில்லாவிடில் உலகமெல்லாம் அக்ஞானவிருளாகவேயிருக்கும் என்பர். அக்ஞானவிருட்டை அகற்ற சப்தமென்றும் ஜ்யோதிஸதான ஸமர்த்தமாகும். மனமெனும் குகையிலல்லவோ அக்ஞானவிருள் நிரம்பியிருக்கிறது. எந்த விளக்கு அதனுள்ளேபோய் வெளிச்சம்காட்ட திறமையுடையது. ஜகத்குருவும், ஆதிகுருவும் பரமகுருவுமான ஸ்ரீமானனாராயணனே தானே மதுராபுரியிலவதரித்து குருக்ஷேத்ரமெனும் தர்மக்ஷேத்திரத்தில் இந்தகீதையைப்பாடி என்றுமணையாத ஞானதீபத்தை சாச்வதமாக ஏற்றிவைத்தான். உப்பரிகைமேல் விளக்கேற்றிவைக்கையில் மங்களமாகப்பாடுவர். பாடிக்கொண்டே கீதை விளக்கை ஏற்றிவைத்தான். நந்தா விளக்கு. உப்பரிகைமேல் அபாயமில்லாமல் தடுக்கிவிழாமல் ஏறுவதற்கு தீபமில்லாமல் முடியுமோ? உபநிஷத்துக்கள் வேதங்களின் உச்சி, சிகரம். வேதங்கள் கிரிரூபங்கள். உபநிஷத்து வேதபர்வதசிகரம். உபநிஷத்தின் உச்சியிலுள்ளது தத்துவஜ்ஞாநம், அதை ஏறிப்பிடிக்க கீதையே படிக்கட்டாயும் படியேற வழிகாட்டும் தீபமுமாகும். உப்பரிகை உச்சியில் உச்சிமலையில் உலகத்திற்கு ஏற்றிவைத்த விளக்கு. நாராயணனால் நரனை வ்யாஜமாகக்கொண்டு நரலோகத்திற்கு ஏற்றிவைத்த விளக்கு. பரஞ்சுடரேற்றிய விளக்கு. எங்கே பாடியது கீதை? 'ஜகதி' உலகம் முழுவதிலும் உலகப்பரப்பெல்லாம் பரவப்பாடியது. ஓரிடத்தில் ஒருவர் பேசுவதை உலகமெல்லாம் கேட்கும்படி ஈச்வரன் கொடுத்த சக்தியால் ஸுலபமாய்ப் பரவச்செய்வதை நாம் நேரில் இப்பொழுது காண்கிறோம். ஈச்வரன் திருவாக்கிலிருந்து வெளிவந்த பாட்டு நாம் ஒரு ப்ரயத்நப்படாமலும், அது முதல் உலகமெங்கும் பரவி ஆநந்தித்து வருகிறது. 'விகீதா' என்றால் பிறர் ஒவ்வாமல் ஸரியன்று என்று ஆக்ஷேபிப்பது. விகீதை என்றால் கீதையாகாது. காநத்திற்கு விரோதி விகாநம். பின்பு எக்காலத்திலும் எத்தேசத்திலும் எம்மதத்திலும் விபச்சித்தாயுள்ளவர் (புத்திமான்கள்) ஒருவரேனும் கீதையின் அழகை ஆக்ஷேபிக்கமாட்டார் என்னும் தத்துவத்தை

ஸ்வாமி அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பே அறிந்து இப்படி அழகாக ஸாதிப்பதை ரஸிகலோகம் ரஸிக்கவேண்டும். புத்திமானாக இருந்தால் கீதையை ஆக்ஷேபிக்கமாட்டான். ஆக்ஷேபிப்பவன் புகழாதவன், புத்திமானல்ல. பாபிகள் தாங்காச் சுமையாவது அவர்கள் பாபபாரத்தாலே மலைகளைச் சுமப்பது பூமிக்குச் சுமையன்று. பாபச்சுமையுடைய பாபிகளைச் சுமப்பதுதான் பூமிக்குப் பொறுக்காச் சுமை. பூமிப்பிராட்டியின் பாபச்சுமையை லகுவாக்குவது என்பது பேர்மட்டும். உண்மையில் கீதையையும் அதிலும் அந்தமான சரமச்லோகத்தையும் பாடி, நம்மை லக்ஷ்மீதரனை தன்னைச் சரணம்பற்றச் செய்து, நம் பாபச்சுமைகளை நீக்குவதுதான் உண்மையான நோக்கம். பூமிச்சுமையையும் நம் சுமையையும் நீக்க லக்ஷ்மியைச் சுமந்துகொண்டு வந்தான். திருமார்பில் லக்ஷ்மியைச் சுமந்துகொண்டு வந்தானென்பதைக் காட்ட 'லக்ஷ்மீதரமவதார்ய' என்றார். திருச்சுமையைச் சுமந்துவராமல், திருஸஹாயமில்லாமல் இந்த க்ருபாவ்யாபாரங்கள் ஸாத்தியமல்ல. பாரத்தைப் போக்குவது என்று முன் பாதத்தில் பூமிவிஷயத்தில் பேசியுள்ளது. சரமச்லோகத்தோடும் முடியும் கீதை பாடுவதைப் பற்றிய பின்பாதியிலும் நம் பாபச்சுமையைப் போக்குவதுதானுண்மைக் கருத்து என்று த்வநியினால் காட்டும். பூமிச் சுமையைக் கழிப்பது மேலுக்கு வேஷமென்றபோது, மற்றவர் சுமையைக் கழிப்பது உண்மை என்று முடிந்தால்தானே அழகு. 'ஆச்ரிதயோகக்ஷேமங்களை நான் சுமக்கிறேன்' என்று பட்டைப் பகல் வெளிச்சம்போல வ்யக்தமாய் கீதை நடுவில் பாடினான். (89)

𑌵𑍃𑌷𑌾𑌦𑍍𑌰𑌿𑌹𑌯𑌸𑌾𑌦𑌿𑌨𑌃 𑌪𑍍𑌰𑌬𑌲𑌦𑍋𑌰𑍍𑌮𑌰𑍁𑌤𑍍𑌪𑍍𑌰𑍇𑌙𑍍𑌖𑌿𑌤
𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌷𑌾 𑌸𑍍𑌫𑍁𑌟𑌤𑌡𑌿𑌦𑍍𑌗𑍁𑌣𑌸𑍍𑌤𑍍𑌵𑌦𑌵𑌸𑍇𑌕𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌵𑌾𑌨𑍍 ।
𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌦𑌯𑍇 𑌕𑌲𑌿𑌪𑍍𑌰𑌬𑌲𑌕𑌰𑍍𑌮𑌨𑌿𑌰𑍍𑌮𑍂𑌲𑌨𑌃
𑌪𑍁𑌨𑌃 𑌕𑍃𑌤𑌯𑍁𑌗𑌾𑌙𑍍𑌕𑍁𑌰𑌂 𑌭𑍁𑌵𑌿 𑌕𑍃𑌪𑌾𑌣𑌧𑌾𑌰𑌾𑌧𑌰𑌃 ॥

வ்ருஷாத்ரிஹயஸாதிந: ப்ரபலதோர்மருத்ப்ரேங்கித
ஸ்த்விஷா ஸ்புடதடித்குணஸ்த்வதவஸேகஸம்ஸ்காரவாந் ।
கரிஷ்யதி தயே கலிப்ரபலகர்மநிர்மூலந:
புந: க்ருதயுகாங்குரம் புவி க்ருபாணதாராதர: ॥ (90)

(ப-ரை) 𑌦𑌯𑍇 - தயையே! 𑌵𑍃𑌷𑌾𑌦𑍍𑌰𑌿𑌹𑌯𑌸𑌾𑌦𑌿𑌨𑌃 - வேங்கடமலையிலுள்ள குதிரை ஸவாரி செய்யவல்ல பெருமானு

டைய, வ்யூட₄தோ₃ஷ்ஸமுத்₃த₄தாநிலோல்லஸித: - ரொம்பவும் வேகமான கைவீச்சினாலுண்டாகும் காற்றினால் அசைக்கப்படுவதும், (ஆட்டப்படுவதும்), த்விஷா - பளபளவென்று மின்னுங்காந்தியால், தடித்₃கு₃ணா: - மின்னல் என்னும் குணத்தை (கொடியை) நன்ருகவுடையதும், த்வத₃வஸேகத: - உன்னால் நனைத்துத்தோய்ச்சலினால், ஸம்ஸ்க்ருதவாந் - சுத்திசெய்யப்பட்டதும், கலிஸமயநிதா₃க₄ஶமந: - கலியுகத்திற்கு உரிய ப்ரபலதாபங்களைப் போக்குவதுமான, க்ருபாணஜலத₃: - கத்தியென்னும் மேகமானது, பு₄வி - பூமியில், புந: - மறுபடியும், க்ருதயுகா₃ங்குராந் - க்ருதயுகாரம்பத்திற்கு முளைகளை, கரிஷ்யதி - ஏற்படுத்தும்.

“ தயையே! வேங்கடமலையின்மேல் குதிரை ஸவாரியில் நிபுணனான ஸ்ரீநிவாஸனுடைய பலமான கைவீச்சினால் அடிக்கும் காற்றினால் சலிக்கப்பட்டதும், பளபளவென்று மின்னும் காந்திகளால் மின்னற்கொடிகளை உடையதாயும், உன்னுடைய தோய்ப்பினால் நல்ல சுத்தியை அடைந்ததுமான, கத்தியென்னும் மின்னும் கருமேகமானது பூமியில் கலியுகத்தில் ப்ரபலமான தாபங்களை வேரோடு பிடுங்கி எறிந்து க்ருதயுகம் ஆரம்பிக்க அதற்கு வேண்டிய முளைகளை மறுபடியும் உற்பத்தி செய்யும்.

(தா-ம்) கலி முடிவில் அவதரிக்கும் வெள்ளைக் குதிரைமேல் ஏறிக்கொண்டு பளபளவென்று மின்னும் தம் கத்தியை வீசிக்கொண்டு கலியில் மிகவும் கொடியவர்களாகவே மிஞ்சியிருக்கும் பாபிகளை நிர்மூலனம் செய்து, காட்டை அழித்துவிட்டுப் புதுப் பயிரிடுவாரைப்போல க்ருதயுகதர்மத்துடன் க்ருதயுகத்தின் ஆரம்பத்தை அவதரிப்பிப்பாரென்று சொல்லப்பட்டுளது. கல்கியவதாரத்திற்கும் தர்மஸ்தாபனம்தானே முக்கியப்பிரயோஜனம். ரொம்பவும் பாபிகளாய்விட்டால் அவர்களை அப்படியே விட்டுவிட்டால், பாபபுத்தி எல்லையில்லாமல் ஏறிப்போய் நன்மார்க்கத்திற்கு மீள வழியில்லாமற்போம். அவர்கள் சரீரங்களை அழித்துவிட்டு, யுகாந்தரமான முதல் யுகாரம்பம் ஆரம்பிக்கும்படி செய்வது தயாகார்யமாகும். பளபளவென்று மின்னிக்கொண்டிருக்கும் நீரோட்டக்கத்தியை மின்னும் மின்னற்கொடிகளையுடைய கார்மேகமாகவும், பாபிகளை வெட்டியெறியும் அக்கத்தியே மேகம்

போல தயையை வர்ஷித்துக்கொண்டு க்ருதயுகமுளைகளைக் கிளம்பச்செய்வதாகவும் வர்ணிக்கிறார். பாபிகளைக் கத்தியால் வெட்டிக் கழிப்பதும் தயாகார்யம். அதே கத்தி மேகம்போல வர்ஷித்துக் கிருதயுகத்தையும் க்ருதயுக தர்மத்தையும் முளைக்கச்செய்யும். மேகங்களைப் பரவச்செய்யக் காற்று வேண்டும். கல்கியான பகவான் மஹாவேகத்தோடும் பலத்தோடும் கத்தியை வீசுகையில், பெருங்காற்றடித்து எங்கும் பரவும். மலையரசன் குதிரை ஏறுவதில் நிபுணராயிருப்பார். மலைமேல் குதிரை ஏறிக்கொண்டு மஹாபலிஷ்டரான பெருமாள் கத்திவீச்சினால் காற்றடித்து மேகம் பரவ ஸௌகர்யமாயிருக்கும். கத்தி கருமையினால் மேகம்போலும், வீசுகையில் பளபளவென்று மின்னற்கொடிகள் மின்னுவதுபோலும், கத்தி தன் கூர்மையான தாரைகளால் நீரோட்டமுடையதுபோலும், காட்டையழிக்க உதவும் கத்தியே மேகரூபமாக நீர் தாரைகளை வர்ஷித்துப் புது முளைகள் கிளம்பும்படி செய்வதுபோலவும், கத்தியும் தயாஜலத்தால் தோய்ப்புண்டு, தயையின் ப்ரபாவத்தால் மேகமாகி வர்ஷிப்பதுபோலவும் உல்லேகம். மலையரசனான ஸ்ரீநிவாஸன் இப்படி கல்கியவதாரம் செய்யத்தக்கவர். ‘கலௌ வேங்கடநாயக:’ என்று கலியில் பூர்ணாதிகாரம் செலுத்துமவர் திருவேங்கடமுடையான். கலியுகமுடிவில் அவரே கல்கியாக அவதரிப்பது உசிதம். கொல்லும் கத்தியே தயாமேகமாவதால் பாபம் முற்றின தசையில் கொல்லுவதும் தயாகார்யமாகும். தயையினால் கலியுகத்தை க்ருதயுகமாக மாற்றிவிடுகிறார். கலியுகம் தொலைவதும் தயாகார்யம். க்ருதயுகம் வருவதும் தயாகார்யம். கத்தியைக் காளமேகமாகவும், அதை வேகமாய் வீசுவதால் மேகங்கள் கூடுவதுபோலிருப்பதையும் மஹாகவிகள் வர்ணிப்பதுண்டு. வெட்டத்தூக்கின கத்தியும் தயையின்ப்ரபாவத்தால் வர்ஷிக்கும் மேகங்களாகிறது. (90)

விஶ்வோபகாரமிதி நாம ஸதா₃ து₃ஹாநா
த்₃ருஷ்டாஸி தே₃வி ப₄வதீ வ்ருஷஶைலதா₄ம்ந: ।
நாதே₂ நிவேஶ்ய வ்ருஷாத்₃ரிபதௌ ஸ்வம்
ஸ்வத்வஸ்ய ரக்ஷணப₄ரம் த்வயி தம் ஸ்வயமேவ ॥ ॥ ௯௧ ॥

விச்வோபகாரமிதி நாம ஸதா துஹாநா
மத்யாபி தேவி பவதீமவதீரயந்தம் 1
நாதே நிவேசய வ்ருஷாத்ரிபதேர் தயே த்வம்
ந்யஸ்தஸ்வரக்ஷணபரம் த்வயி மாம் த்வயைவ 11 (91)

(ப-ரை) தேவி வ்ருஷாத்ரிபதே தயே - வேங்கடமலையரசன் தயாதேவியே! இதி நாம - இவ்வாறாக, (முன்பு 90-ச்லோகங்களால் நிரூபித்திருக்கிறபடி) விச்வோபகாரம் - ஸகல விதமான உபகாரங்களையும், (உலகத்திற்கு உபகாரத்தை) ஸதா - எக்காலத்திலும், துஹாநாம் - கறந்துகொண்டிருக்கும் (அளித்துக்கொண்டிருக்கும்), பவதீமபி - உன்னைக்கூட, அத்யாபி - இன்றைக்கும், அவதீரயந்தம் - அலக்ஷ்யம் செய்பவனும், த்வயைவ - உன்னாலேயே, த்வயி - உன்னிடத்தில், ந்யஸ்தஸ்வரக்ஷணபரம் - ஒப்புவிக்கப்பட்ட ரக்ஷணப்பொறுப்பையுடைய, மாம் - என்னை, த்வம் (ஏவ) - நீயே, நாதே - வேங்கடநாதனிடத்தில், (லோகநாதனிடம், உன் நாதனிடம்) நிவேசய - அகலாமல் புணைத்து வைக்கவேண்டும்.

"இப்படி ஒன்பது சதகங்களால் வர்ணித்திருக்கிறபடி ஸகல விதமான உபகாரங்களையும் எனக்கு நீ அளித்துக் கொண்டிருந்தும், உன்னை அலக்ஷ்யம் செய்பவனும் உன்னாலேயே உன்னிடத்திலேயே என் ரக்ஷணபரம் முழுவதையும் வைக்கப்பட்டு உள்ளவனுமான என்னை நீயே உன் நாதனிடத்தில் (அகலாமல்) நிறுத்தி வைப்பாயாக".

(தா-ம்) ஒன்பது பத்துப் பாட்டுக்களால் தயை செய்யுமுபகாரங்களையெல்லாம் பாடினார். "இப்படிக்கு எல்லா உபகாரங்களையும் எல்லா உலகத்திற்கும் எல்லாக் காலமும் பால் கறப்பது போல் கறந்துகொண்டேயிருக்கும் என்று முன் விஸ்தரித்துப் பேசிய எல்லா உபகாரங்களையும் சேர்த்து அநுவாதம் செய்கிறார். 'கறக்கிறாய்' என்பதால் 'கறக்கப்படுவது ஸ்ரீநிவாஸனென்னும் பசு' என்பது வ்யஞ்ஜநம். ஸ்ரீநிவாஸனைப் பசுபோல் கறந்து கொடுக்கிறாள். புருஷோத்தமனைக் காராம் பசுவாக்கிக் கறக்கிறாள். குழந்தைகளாகிய நமக்கு அவனிடம் கறந்து பால்போல் கொடுக்கிறாள். இப்படித் தாய்போல ஸ்நேஹித்து ஸர்வோபகாரமும் செய்யுமுன்னை நான் இன்னங்கூட அவமதிக்கிறேன். நான் அவமதித்தாலும் நீ என்னை ஸ்ரீநிவாஸனிடத்திலேயே பிரியாமல் தங்கியிருக்கும்படி செய்யவேணும். அவமதிப்பவனைக் கைவிட்டாலென்ன என்று நீ உபேக்ஷிக்கக்கூடாது. நானாக உன்னைச் சரணம் பற்றியிருந்தால், நான் அதற்கு விரோதமாக உன்னை அவமதித்தால் நீ என்னைக் கைவிடலாம். நீ ஸ்வயமாகவன்றோ என் பரத்தை உன்னிடமே ஏற்றுக்கொண்டு என்னை ரக்ஷிப்பதாகக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறாய். நீயாக வலுவில் என்னை ரக்ஷிப்பதாக என் பாரத்தை ஏற்றுக்கொண்ட பின் நான் தவறி நடக்கத் துணிந்தாலும், நீ அதற்காக என்னைக் கைவிட்டாலும், உன் வ்ரதத்திற்கும் நீ என்னை ஸரியாக வலுவில் அடைக்கலம் கொண்டதற்குமன்றோ விரோதம் வரும். ஆகையால் ஸ்ரீநிவாஸனைவிட்டு அகலாமலிருக்கும்படி செய். இப்படியாக 10-சுலோகங்களால் 'உத்ஹர்ஷிணீ' என்றும், 'ஸிம்ஹோந்நதா' என்றும் பெயரையுடைய சந்தத்தில் மலையுச்சியில் கவலையற்று ஸந்தோஷமாகப்பாடுகிறார். (91)

நைஸர்கிகேண தரஸா கருணே நியுக்தா
நிம்நேதரேऽபி மயி தே விததிர்யதி ஸ்யாத் |
விஸ்மாபயேத் வ்ருஷகிரீச்வரமப்யவார்யா
வேலாதிலங்கநதசேவ மஹாம்புராசே: || கூஉ ||

நைஸர்கிகேண தரஸா கருணே நியுக்தா
நிம்நேதரேzபி மயி தே விததிர்யதி ஸ்யாத் 1
விஸ்மாபயேத் வ்ருஷகிரீச்வரமப்யவார்யா
வேலாதிலங்கனதசேவ மஹாம்புராசே: 11 (92)

(ப-ரை) கருணே - தயையே! (தே) நைஸர்கிகேண - (உன்னுடைய) ஸ்வாபாவிகமான, தரஸா - ஸம்ப்ரம வேகத்தால், நியுக்தா - ஏவப்பட்ட, தே விததி: - உன்னுடைய வெள்ளப்பரப்பு, நிம்நேதரே - தாழ்மையில்லாத (கர்வத்தால் மிக்க உயர்த்தியை அபிமானிக்கும்), மயி அபி - என்னிடத்தில் கூட (என்பேரில் கூட), யதி ஸ்யாத் - மோதும் பொழுது (மோதினால், மோதுவதால்) (அது), அவார்யா - தடுக்க ஸாத்தியமல்லாத, மஹாம்புராசே: - மஹாஸமுத்திரத்தினுடைய, வேலாதிலங்கநதசேவ - கரைதாண்டி மோதும் அவஸ்தையேயென்று, வ்ருஷகிரீச்வரம் - வேங்கடமலையரசனை, விஸ்மாபயேத் - ஆச்சர்யப்படச்செய்யும்.

" தயையே! உன்னுடைய ஸ்வபாவமான ரக்ஷிக்கும் வேகப் பரப்பில் அசைக்கப்படும் உன்னுடைய வெள்ளப்பரப்பு தாழ்மையேயில்லாமல் அஹங்காரத்தால் மலைஉச்சிக்குமேல் உயரமாக அபிமானித்திருக்கும் என்மேரிலும் அடித்து மோதுகிறது. உன் அலை அதற்குமேல் உயரமாக மோதுகிறது. மலை ப்ரபு ஸ்ரீநிவாஸன் இதைப்பார்க்கும்பொழுது 'இதென்ன மஹாஸமுத்ரம் கரைதாண்டி தடுக்கமாட்டாமல் மோதும் தசையோ'வென்று இந்த உன் வேகமான அலைமோதல் அவரை ஆச்சர்யப்படும்படி செய்யும்.

(தா-ம்) பெருமாள் மலைஉச்சியிலெழுந்தருளியிருக்கிறார். நான் அவருக்கும்மேல்பட்டவனென்று அஹங்காரங்கொண்டு அவருக்கு மேல் உயரத்தில் தாவுகிறேன். உனக்கோ எம்மையெல்லாம் ரக்ஷிக்கவேண்டுமென்று ஆசையால் மிக்கவேக ஸம்ப்ரமமிருக்கிறது. என் உயரத்தையும் எட்டிப்பிடித்து என்னை ரக்ஷிக்க வேண்டுமென்று எனக்கும்மேல் அதிவேகமாய் உன்வெள்ளத்தை அலைத்து மோதி என்னையும் உனக்கு விஷயமாக்குகிறாய். வேங்கடமலையுச்சியிலுள்ள பெருமாள் தம் தலைக்கும் மேல் உன் ஸமுத்ர வெள்ளமலைத்து ஓடுவதைப்பார்க்கிறார். தடுக்கமுடியாமல்கரையையுடைத்துமஹாஸமுத்ரம்வெள்ளமிட்டு மலையெல்லாம் முழுகும்படி அலைக்கும் காலம் வந்துவிட்டதோ என்று உன் அலை வேகத்தைப் பார்த்து ஆச்சர்யப்படுகிறார். பெருமாளுக்கு மேலே என் அஹங்காரம் என்னைத் தூக்கிக்கொண்டுபோயிருக்கிறது. என்னைப்பிடிக்க அவருக்கும்மேல் நீ மோதவேண்டியிருக்கிறது. நம் தலைக்கு மேலும் வெள்ளம் அலைத்து மோதுகிறது, இதென்ன மஹாஸமுத்திரத்திற்கு மஹாப்ரளய ஸமயமோ வென்று ஆச்சர்யப்படுகிறார். (92)

𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌶𑌾𑌸𑌨𑌗𑌤𑌿𑌰𑍍𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾
𑌵𑍃𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌪𑌰𑌿𑌚𑌿𑌤𑌾𑌂 𑌪𑌦𑌵𑍀𑌂 𑌭𑌜𑌾𑌮𑌿 ।
𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑍇 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑍀𑌶𑌦𑌯𑍇 𑌮𑌯𑌿 𑌤𑍍𑌵𑌂
𑌦𑍀𑌨𑍇 𑌵𑌿𑌭𑍋𑌃 𑌶𑌮𑌯 𑌦𑌣𑍍𑌡𑌧𑌰𑌤𑍍𑌵𑌲𑍀𑌲𑌾𑌂 ॥ ॥ ௯௩ ॥

விஜ்ஞாதசாஸநகதிர்விபரீதவ்ருத்யா
வ்ருத்ராதிபி: பரிசிதாம் பதவீம் பஜாமி ।
ஏவம் விதே வ்ருஷகிரீச தயே மயி த்வம்
தீநே விபோ: சமய தண்டதரத்வலீலாம் ॥ (93)

(ப-ரை) 𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑍀𑌶𑌦𑌯𑍇 - வேங்கடமலையரசன் தயையே! 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌶𑌾𑌸𑌨𑌗𑌤𑌿𑌃 - சாஸ்திரவிதிகளின் முறைகளையும் சாஸ்திரத்தில் விதித்திருக்கும் தண்டனைகளையும் தெரிந்திருந்தும், 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 - விரோதமான ஆசாரத்தோடு கூடியவனாக, 𑌵𑍃𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 - வ்ருத்ராஸுரன் முதலியவர்களாலே, 𑌪𑌰𑌿𑌚𑌿𑌤𑌾𑌂 - நடக்கப்பட்ட (ஆசரிக்கப்பட்ட), 𑌪𑌦𑌵𑍀𑌂 - மார்க்கத்தை, 𑌭𑌜𑌾𑌮𑌿 - ப்ரீதியோடுகூட ஸேவிக்கிறேன், 𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑍇 - இப்படிக் கொடியவனான, 𑌮𑌯𑌿 - என் விஷயத்தில், 𑌦𑍀𑌨𑍇 - பேதையாக (காலில் விழுந்த) என் விஷயத்தில், 𑌵𑌿𑌭𑍋𑌃 - ப்ரபுவினுடைய, 𑌦𑌣𑍍𑌡𑌧𑌰𑌤𑍍𑌵𑌲𑍀𑌲𑌾𑌂 - தண்டிப்பது என்னும் லீலாவ்யாபாரத்தை, 𑌶𑌮𑌯-நீ சாந்தப்படுத்தவேணும்.

" தயையே! சாஸ்திரங்கள் தடுப்பதையும் தண்டனை விதிப்பதையும் நான் அறிந்தவனே. அறிந்தும் வ்ருத்ராஸுரன், ஹிரண்யன், ராவணன் முதலியவர்கள் ஆசரித்த மார்க்கத்தையே நானும் இடைவிடாமல் ஆசரித்து வருகிறேன். இப்படிக்கொடிய துஷ்டனான என் விஷயத்திலும் நான் பேதையாய் அகதியாய் உன் அடைக்கலத்திற்கு பாத்திரமானதைக்கொண்டு பெருமாள் என்னைத் தண்டிக்கும் வ்யாபாரமாகிய லீலையைச் சாந்தப்படுத்த வேணும்.

(தா-ம்) சாஸநகதியை நான் தெரிந்தவன், தெரியாதவனல்ல. தெரிந்தவன் (வித்வானாயிருப்பவன்) சாஸ்திரவிதியை அதிக்ரமித்தால் தண்டனை அதிகமென்றும், தெரியாதவன் தப்புச்செய்தால் தண்டம் குறைவென்றும் சாஸ்த்ரம். 'சாஸந' மென்பது சாஸ்த்ரத்தையும் சொல்லும். தண்டனை (சிக்ஷை) என்பதையும் சொல்லும். நான் பண்ணும் சாஸ்திரத்தின் அதிக்ரமம் ஸாமாந்யமானதல்ல. வ்ருத்ராஸுரன், ஹிரண்யன், ராவணன் முதலியவர்கள் பகவானுக்கு சத்ருக்களாகவேயிருந்து ஆக்ஞையை மீறியே நடந்து எதிரம்பு கோத்துவந்ததுபோல், நானும் நடந்துவந்திருக்கிறேன். வித்வானான நான் இப்படிக்கொடிய அதிக்ரமங்கள் செய்து வந்ததற்கு எத்தனையோ கடுமையான தண்டனைகளும் ந்யாயமானதே. ஆயினும் பேதையாய் உன்னடைக்கலமான என் விஷயத்தில் ப்ரபுவின் தண்டிக்கும் லீலாவ்யாபாரத்தை சமனம் செய்து உன்னுடைய தயாவ்யாபாரமே மேலிடும்படி செய்ய வேணும். (93)

மா ஸாஹஸோக்திகனகஞ்சுக வஞ்சிதாந்ய:
பச்யத்ஸு தேஷு விததாம்யதிஸாஹஸாநி ।
பத்மாஸஹாயகருணே ந ருணத்ஸி கிம் த்வம்
கோரம் குலிங்கசகுநேரிவ சேஷ்டிதம் மே ॥ ௯௪ ॥

மா ஸாஹஸோக்திகனகஞ்சுக வஞ்சிதாந்ய:
பச்யத்ஸு தேஷு விததாம்யதிஸாஹஸாநி ।
பத்மாஸஹாயகருணே ந ருணத்ஸி கிம் த்வம்
கோரம் குலிங்கசகுநேரிவ சேஷ்டிதம் மே ॥ (94)

(ப-ரை) மா ஸாஹஸோக்திகனகஞ்சுக வஞ்சிதாந்ய: - ஸாஹஸம் செய்யாதே என்ற பேச்சாகிய கெட்டிக்கவசத்தை (ஸாதுவேஷத்தை)ப் போட்டுக்கொண்டு பிறரை வஞ்சித்துக் கொண்டு, பச்யத்ஸு தேஷு - அவர்கள் பார்த்துக்கொண்டே யிருக்கையில், அதிஸாஹஸாநி - மிகப்பெரிய ஸாஹஸகார்யங் களை, விததாமி - நன்ருய்ச் செய்கிறேன், பத்மாஸஹாயகருணே - ஸ்ரீநிவாஸனுடைய தயையே, குலிங்கசகுநேரிவ - குலிங்கப்பக்ஷியினுடைய (செய்கையைப்போல), கோரம் - கொடியதான, மே சேஷ்டிதம் - என் செய்கையை, கிம் - ஏன், த்வம் - நீ, ந ருணத்ஸி - தடுக்கிறதில்லை.

ஸாஹஸத்தை செய்யாதே என்று பிறர் காது கேட்கச் சொல்லிக்கொண்டே அந்த ஸாதுவேஷத்தை பிறர் நம்பும்படி போட்டுக்கொண்டு அவர்கள் எல்லோரும் பார்த்துக்கொண்டிருக் கையிலேயே அவர்கள் முன்னே மிதம்மிஞ்சின ஸாஹஸங்களைச் செய்கிறேன். இப்படிக்கு (ஸாஹஸம் செய்யாதே என்று கத்திக் கொண்டே ஸிம்ஹம் தூங்கிக்கொட்டாவி விடுகையில் அதன் வாயிற்குள் புகுந்து அதன் பல்லிடுக்கில் ஒட்டியிருக்கும் மாம் ஸத்தைத் தின்று வெளியேவரும்) குலிங்கப்பக்ஷியைப்போல கோரமான துணிச்சல் செய்கையை நான் செய்வதை நீ ஏன் தடுக்கக்கூடாது.

முன் ச்லோகத்தில் சாஸ்த்ரம் எத்தை விதிக்கிறதென்றும் எதைச் செய்யாதே என்று தடுக்கிறதென்றும் தாம் தெரிந்தும் சாஸ்திரக்கட்டளைகளை மீறுகிறேனென்ருர். இங்கே சாஸ்திரக் கட்டளையை நான் அறிந்ததோடுகூட பிறருக்கும் உபதேசித்து

வருகிறேன். அப்படிக்கிருந்தும் நான் மட்டும் மீறிநடக்கிறேன் என்கிருர். உபதேசிக்கப்படும் சிஷ்யர்கள் பார்த்துக்கொண்டே யிருக்கையில் அப்படி மீறித் தப்புநடவடிக்கைகள் செய்கிறேன் என்கிருர். பிறருக்கு உபதேசிப்பது மேலுக்கு வேஷம். குலிங்கப் பக்ஷி த்ருஷ்டாந்தத்தைக் காட்டுகிருர். 'ஸாஹஸம் மா குரு' (ஸாஹஸம் செய்யாதே) என்ற த்வநியாக அது கத்திக்கொண்டே யிருக்கும். ஸிம்ஹத்தின் வாய்க்குள் புகுந்து அதன் பல்லிடுக்கில் ஒட்டிக்கொண்டிருக்கும் மாம்ஸத்தைக்கடித்து இழுத்துக்கொண்டு வெளியேவரும். இப்படிச் செய்துகொண்டேயிருக்கும். இந்தத் திருஷ்டாந்தத்தை சிசுபாலன் ராஜஸூய யாகத்தில் பீஷ்மா சாரியருக்கு உபமானமாகச் சொல்லி அவரைத் தூஷிக்கிருன். 'பீஷ்மரே! ஹிமவத்கிரி பக்கத்தில் குலிங்கபக்ஷியென்று ஓர்பக்ஷி யுண்டு. அதன் வாயிலிருந்து அதற்கு அர்த்தம் தெரியாமல் 'மா ஸாஹஸம்' என்று திரும்பவும் திரும்பவும் சப்தம் வந்து கொண்டேயிருக்கும் என்று அங்கே சிசுபாலன் பேச்சு. ஸிம் ஹாசலமென்னும் வேங்கடமலை ஸர்வேச்வரன் விஷயமாக ஸ்தோத்ரம்பண்ணத் துணிந்ததே ஸாஹஸம். 'என்ன ஞானப் பாட்டுக்களை ஓராசிரியர் தம் சீடருக்கு உபதேசம் பாடியென்ன; குலிங்கப்பக்ஷியைப்போல் வாய்ப்பாட்டு நல்லதாயிருந்தும், தன் னுடைய துஷ்ட ஸ்வபாவப்படித்தானே ஆசரிக்கிருன்' என்கிற பாரதச்லோகத்தையும் இங்கே நினைக்கிருர். (94)

விக்ஷேபமர்ஹஸி தயே விபலாயிதேऽபி
வ்யாஜம் விபாவ்ய வ்ருஷசைலபதேர்விஹாரம் ।
ஸ்வாதீந ஸத்வ ஸரணிஸ் ஸ்வயமத்ர ஜந்தௌ
த்ராகீயஸீ த்ருடதரா குணவாகுரா த்வம் ॥ ௯௫ ॥

விக்ஷேபமர்ஹஸி தயே விபலாயிதேऽபி
வ்யாஜம் விபாவ்ய வ்ருஷசைலபதேர்விஹாரம் ।
ஸ்வாதீந ஸத்வ ஸரணிஸ் ஸ்வயமத்ர ஜந்தௌ
த்ராகீயஸீ த்ருடதரா குணவாகுரா த்வம் ॥ (95)

(ப-ரை) தயே - தயையே! விபலாயிதேऽபி - நான் நீ வேண்டாமென்று அகன்று அதிதூரமோடினாலும், வ்ருஷ சைலபதே: - வேங்கடபதிக்கு, விஹாரம்-(வேட்டையாடுத லென்னும்) விளையாட்டை, வ்யாஜம் - ஒரு சாக்காக, விபாவ்ய-

கல்பித்துக்கொண்டு, விக்ஷேபஸஹாஸி - என்பேரில் தாவி என்னைப்பிடித்து உன் வசமாக்கவேணும், ஜ்ஞாதஶ்வாபதஸஞ்சரணி: - ப்ராணிகள் ஸஞ்சரிக்கும் வழி தெரிந்தவளாக (மான் முதலிய ப்ராணிகள் காடுகளில் எங்கே ஸஞ்சரித்தாலும் அவை இருக்குமிடமறிந்து ஓடிப்பிடிக்கக்கூடியவளாயும்), அத்ர ஜநே - இங்கேயுள்ள ப்ராணிவிஷயத்தில், த்வம் - நீ, ஸ்வயம் - உன்னிச்சையினாலே ஸ்வயமாகவே, த்ராகீயஸீ - அதிக நீளமும், த்ரடிமதரா - அதிக கெட்டியுமான, குணவாகுரா - (குணங்களாலமைந்த) கயிறு வலையாக இருக்கிறாய். (மிக்க நீளமும் கெட்டியுமான கயிறுவலையாகி நீ தூர ஓடி ஒளியும் என்னைப் பிடித்து உன் நாயகன் வசமாக்கவேணும்).

"தயையே! வேங்கடமலையரசனுக்கு விஷயக்காடுகளில் ஸஞ்சரிக்கும் பிராணிகளை வலைபோட்டுப் பிடிக்கிறதென்ற வேட்டை விளையாட்டை ஒரு சாக்காக ஏற்படுத்திவைத்து, ப்ராணிகள் ஓடி ஒளியும் மார்க்கங்களையறிந்தவளும் அவற்றைப்பிடிக்கும் திறமையுடையவளுமாய் நான் எத்தனை தூரமோடினாலும் அதைவிட அதிக நீளமும், நான் எத்தனை பலமாகத் திமிறினாலும் அதனிலும் கெட்டியுமான குணமென்றும் (கயிறு) வலையாகி நீயாகவே நான் ஓடியொளியுமிடம் வரையில் நீண்டு என்னைப் பிடித்து உங்கள் வசமாக்கிக்கொள்ளவேணும்.

அரசர் வேட்டையாடுவதில் ருசியுடையவர். மலையரசர் காடுகளில் ப்ராணிகளை வேட்டையாடுவதை விநோதமாகவுடையவராயிருப்பவர். தயைக்கு விஷயமாகவே கூடாதென்று விஷயக் காடுகளில் மேய்ந்து ஸஞ்சரித்துக்கொண்டு நாம் வெகுதூரமோடி தயைக்கு அகப்படாமல் ஒளிகிறோம். வேட்டை விநோதமெனும் ஓர்சாக்கை நீயேகல்பித்து அந்தசாக்கைக்கொண்டு நீ ஸ்ரீநிவாஸனை நாங்கள் திரியும் காடுகளுக்கு அழைத்துவரவேணும். தயையான நீ கூடஇருந்து நடத்திவைக்கும் வேட்டை விளையாட்டில் ப்ராணிகளைக் கொல்லுவது கிடையாது. நீண்ட கயிறு வலைகளை வீசி ப்ராணிகளை உயிரோடுபிடித்து அரண்மனைக்குக் கொண்டு போய், அங்கே தீனிபோட்டுக் குளிப்பாட்டித் தட்டிக்கொடுத்து செல்வமாக வளர்ப்பதுமட்டும்தான். விஷயக்காடுகளில் ஸ்வச்சந்தமாய் மேய்ந்து திரியும் மான்போன்ற ப்ராணிகள் நாங்கள்.

அரசன் கையில் அகப்படாமல் திரிகிறோம். எங்களைப்பிடிக்கத் தேடும்போது தூர ஓடி ஒளிவோம். வலை வீசிப்பிடிக்கப்பார்த்தால் பலமாய்த்திமிரி ஓடப்பார்ப்போம் நீயே நீண்டகெட்டிக் குண (கயிறு) வலையாகவேணும். நாங்கள் உங்களுக்கு அகப்படக் கூடாதென்று ஓடி ஒளிந்தாலும் உனக்கு எங்கள் போக்கையறிந்து எங்களைப்பிடித்து ஸ்வாதீனம் செய்யத்தெரியும். 'த்ராகீயஸீ' என்பதற்கு இன்னும் அதிக நீளமான என்பது பொருள். நான் எத்தனை தூரம் ஓடினாலும், நீ அத்தைவிட அதிக நீளமான வலை (கயிறு) ஆகி எங்களைப்பிடிக்கவேணும். நான் ஓடும் தூரத்தைக் காட்டிலும் அதிகமாக நீளும் (குணம் என்பது கயிறுக்கும்பெயர்) உன்குணவலையை நீளவீசி என்னைப்பிடிக்கவேணும். 'த்ருடதரா' என்பதற்கு இன்னம் அதிக கெட்டியான என்று பொருள். நீ எங்கள் தூரஓட்டத்திலுமதிகமாக நீண்டுபிடிக்கும்பொழுதும், பலமாய்த்திமிரி கயிறுவலையை அறுத்து ஓடப்பார்ப்போம். நீ எங்கள் பலத்திமிரைவிட கெட்டியான வலையாகவேணும். தயை மிக்க நீளமும் கெட்டியுமாகவேணும். 'பலாயிதேபி' நான் ஓடினாலும் 'வி'என்பது மிக்கதூரம் ஓடினாலும் என்பதைக்காட்டும். 'விக்ஷேபம்' என்பது எறிவதைச்சொல்லும். வேட்டையில் அம்பையோ, குண்டையோ எறிவதைச் சொல்லும். இங்கே 'தயாகடாக்ஷம்' எறியப்படுகிறது. சர விக்ஷேபமல்ல, கடாக்ஷ விக்ஷேபம் மட்டுமே என்று வேடிக்கை. பாணத்தை எறிதலல்ல. குளிர்ந்த தயாகடாக்ஷத்தை வீசுவதே. ராமபாணம்போல, ராம தயாகடாக்ஷமும். (95)

ஸந்தந்யமாநமபராதகணம் விசிந்த்ய
த்ரஸ்யாமி ஹந்த பவதீம் ச விபாவயாமி ।
அஹ்நாய மே வ்ருஷகிரீச தயே ஜஹீமாம்
மாசீவிஷக்ரஹணகேளிநிபாமவஸ்தாம் ॥ ‖ ௯௬ ‖

ஸந்தந்யமாநமபராதகணம் விசிந்த்ய
த்ரஸ்யாமி ஹந்த ப்வதீம் ச விபாவயாமி ।
அஹ்நாய மே வ்ருஷகிரீச தயே ஜஹீமா
மாசீவிஷக்ரஹணகேளிநிபாமவஸ்தாம் ॥ (96)

(ப-ரை) ஸந்தந்யமாநம் - அடுக்கடுக்காய் (கட்டுக்கட்டாய்) என்னால் செய்யப்படும், அபராதகணம் - பாபச்

செய்கைகளின் கூட்டத்தை, விதித்வா - நன்றாய் நினைத்துப் பார்த்து, த்ரஸ்யாமி - நடுங்குகிறேன், அத - உடனே (நல்ல வேளையாய்), பவதீம் - உன்னை, விபாவயாமி - நன்றாக நினைக்கிறேன், வ்ருஷகிரீசதயே-வேங்கடபதியின் தயையே, ஆசீவிஷக்ரஹணகேளிநிபாம் - கொடிய விஷப்பாம்பைப் பிடித்து விளையாடுவதற்கொப்பான, இமாம் - இந்த, மே - என்னுடைய, அவஸ்தாம் - அவஸ்தையை, அஹ்நாய - உடனே, ஜஹி - கொல்லு.

அடுக்கடுக்காய்ச் செய்யப்படுமென்னுடைய கோடிக்கணக்கான அபராதங்களை நினைத்து நினைத்து நடுங்குகிறேன். உடனே உன்னுடைய வைபவத்தை நினைத்து ஆறுதலையடைகிறேன். வேங்கட ப்ரபுவின் தயையே! இப்படிக்கொடிய விஷமுள்ள பாம்பைப் பிடித்தாட்டுவது போன்ற என்னுடைய அவஸ்தையை நீ தொலைக்கவேணும்.

ஸாஹஸத்திலிறங்காமல் என்னைத் தடுக்கவேணுமென்று உன்னை ப்ரார்த்தித்தேன். நீயாக விட்டுத்தொலை யென்றால் நானாகவிட்டுத் தொலைக்க முடியவில்லை, விஷயமென்னும் விஷப் பாம்பைக் கையில்பிடித்து முத்தமிட்டு விளையாடும் ஸாஹஸத்திலேயே ருசியுடையவனாயிருக்கிறேன். பாபங்களைச்செய்துவிட்டு என்ன கொடுமை செய்தேன், என்ன கடோரத் தண்டனை வருமோ என்று நடுங்குகிறேன். உடனே எல்லாத்தையும் பொறுக்கும் உன் ப்ரபாவத்தை நினைத்துத் தேருகிறேன். இப்படி பயத்திற்கும் தேருதலுக்கும் நடுவில் நான் இருந்து திண்டாடுகிறேன். விஷப்பாம்பைத்தொட்டுப் பிடித்து விளையாடுவதில் எனக்குள்ள ருசியை நீதான் தொலைக்கவேணும், கொல்ல வேணும். விஷப்பாம்பு என்னைக்கொல்லுவதற்கு முன் அந்தப் பாம்போடு விளையாடுவதில் என் ருசியை நீ கொன்றுவிடவேண்டு மென்று வேடிக்கையாகக் காட்டுகிறார். 'ஜஹி' என்பதற்குக் 'கொல்லு' என்று பொருள். பாம்புவிளையாட்டு ருசியை நீ கொல்லாவிடில், பாம்பு உன் குழந்தையாகிய என்னைக்கொன்று விடும். பாம்பைப்பிடித்துக்கொண்டு விளையாடுமறியாக்குழந்தை. அந்த விளையாட்டு ருசியை விடும்படி தாயாகிய நீ தான் செய்ய வேணும். (96)

ஔத்ஸுக்யபூர்வமுபஹ்ருத்ய மஹாபராதாந்
மாத: ப்ரஸாதயிதுமிச்சதி மே மநஸ்த்வாம் ।
ஆலிஹ்ய தாந்நிரவஶேஷமலப்ததிருப்தி:
தாம்யஸ்யஹோ வ்ருஷகிரீஶதயே த்வம் ॥

ஔத்ஸுக்யபூர்வமுபஹ்ருத்ய மஹாபராதாந்
மாத: ப்ரஸாதயிதுமிச்சதி மே மநஸ்த்வாம் I
ஆலிஹ்ய தாந்நிரவசேஷமலப்தத்ருப்தி:
தாம்யஸ்யஹோ வ்ருஷகிரீசத்ருதா தயே த்வம் II (97)

(பதவுரை) மாத: - தாயே! மே - என்னுடைய, மந: - மனது, மஹாபராதாந் - கொடியவபராதங்களை, ஔத்ஸுக்யபூர்வம் - மிக்க ஆசையோடு, உபஹ்ருத்ய - (உனக்கு) ப்ரீதியான உபஹாரமாக (உன்னிடம்) கொண்டு ஸமர்ப்பித்து, த்வாம் - உன்னை, ப்ரஸாதயிதும்-ஸந்தோஷப்படுத்த, இச்சதி-நான் ஆசைப்படுகிறேன், தாந் - அந்த உபஹாரங்களை, நிரவஶேஷம் - துளிக்கூட பாக்கியில்லாமல், வ்ருஷகிரீசதயே - வேங்கடபதியின் தயையே! த்வம் - நீ, ஆலிஹ்ய - நக்கி சாப்பிட்டுவிட்டு, அலப்ததிருப்தி: - திருப்தியடையாமல், அஹோ தாம்யஸி - நீ வருத்தப்படுகிறாயே (தவிக்கிறாயே).

"அம்மா! உனக்கு ப்ரீதியான உபஹாரங்களாக மிகவாசையாய் நான் என் கொடிய பாபங்களை ஸமர்ப்பித்து உன்னை ஸந்தோஷப்படுத்த இச்சிக்கிறேன். வேங்கடபதியின் தயையே! நீ அதையெல்லாம் துளிக்கூட சேஷம் வைக்காமல் லேஹநம் செய்து சாப்பிட்டுவிட்டு (வயிறு நிறம்பவில்லையே என்று) கஷ்டப்படுகிறாயே."

(தா-ம்) அம்மா! நீ எனக்குத் தாயானபடியால் விச்வோபகாரங்களையும் நீ எனக்குச் செய்கிறாய். பெற்ற பிள்ளையாகிய நான் என் தாயாருக்கு மிக்க ஆவலுடன் முன் செய்த தீவினைகளனைத்தையும் உபஹாரமாக ஸமர்ப்பித்து உன்னை திருப்தி செய்ய ஆசைப்படுகிறேன். தாய்க்குக் குழந்தைகளுக்கு விரோதிகளான பாபநோய்களைத் தொலைப்பதிலும் மிக்க ஸந்தோஷ

முண்டோ? நான் ஸமர்ப்பித்த பாபங்களையெல்லாம் நீ மிச்சமில்லாமல் உண்டு (ஸம்ஹாரம் செய்து, கொன்று) இத்தனைதானா பாபம், இன்னமில்லையா என்று அத்ருப்திப்படுகிறாய்; நம் அருமைக்குழந்தை இவ்வளவுமட்டும்தானா உண்வு ஸம்பாதித்துக் கொடுத்தான் என்று அத்ருப்தியினால் வருத்தப்படுகிறாய். நான் உன்னைத் திருப்தி செய்ய ஆசைப்பட்டும் உனக்குப் போதுமான உன் பசி தீர உணவு கொடுக்க என்னாலியலவில்லை. 'உலகமுண்ட பெருவாயா' என்றவிடத்தில்போல, இங்கே 'உண்பது' என்பதற்கு 'கொல்லுவது, ஸம்ஹரிப்பது, இல்லாமற் செய்வது' என்பது பொருள். ப்ரளயத்தில் பெருமாள் உலகத்தை உண்பதுபோல, நீ என் பாபங்களையெல்லாம் உண்டு ப்ரளயம் செய்கிறாய். நீ செய்யும் பாபப்ரளயத்தில் தொலையாமல் மிஞ்சும் பாபலேசமும் கிடையாது. இதெல்லாம் சரணாகதிக்கு முன் செய்த தீவினைகள் விஷயம், நான் என் தாயாகிய உன்னை த்ருப்திசெய்யவேண்டுமென்று எத்தனையோ காலமாகத் தேடிய கர்மஸம்பத்தையெல்லாம் உனக்கு ஸமர்ப்பித்தும், உனக்கு த்ருப்தியாகவில்லையோ? ஐயோ பசி தீரவில்லையே என்று பசியினால் தவிக்கிறாய் என்று வேடிக்கையாகப் பேசுகிறார். உலகமுண்ட பெருவாயன் வயிற்றிலும் உன் வயிறு பெரிது. (97)

ஜஹ்யாத்வ்ருஷாசலபதி: ப்ரதிகே(அ)பி ந த்வாம்
கர்மோபதப்த இவ சீதளதாமுதந்வான் ।
ஸா மாமருந்துதபரந்யஸநாநுவ்ருத்தி:
தத்வீக்ஷணை: ஸ்ப்ருசதயே தவ கேளிபத்மை: ॥ (98)

(ப-ரை) வ்ருஷாசலபதி:-வேங்கடமலையரசன், கர்மோபதப்த: - கடும் வெய்யலினால் காயப்பட்ட, உதந்வாந் - ஸமுத்ரமானது, ஶீதலதாம் இவ - தன்னுடைய குளிர்ச்சிஸ்வபாவத்தை (விடாமலிருப்பதுபோல்), ப்ரதிகே(அ)பி - மிக்க

கோபச்சூடு வந்தபோதும், த்வாம் - உன்னை, ஜஹ்யாத் - விடமாட்டார், ஸா - அப்படிக்கொத்த நீ, மாம் அருந்துத பரந்யஸநாநுவ்ருத்தி: - மறுபடியும் உன்னைச் சரண் புகுந்து காப்பாற்றவேண்டுமென்று நான் ப்ரார்த்திப்பதை அஸஹ்யமாக நினைப்பவளாகிய (நீ), தவ - உன்னுடைய, கேலிபத்மை: - விளையாடும் தாமரைப்பூக்களான, தத்வீக்ஷணை: - ஸ்ரீநிவாஸனுடைய (தாமரை மலர்) கடாக்ஷங்களால், தயே - தயையே, மாம் - என்னை, ஸ்ப்ருஶ - தொடு.

"எப்படி மஹாஸமுத்ரமானது வெய்யில் எத்தனை கடுமையாயடித்தாலும் தன்னுடைய ஸ்வபாவமான குளிர்ச்சிகுணத்தை விடாதோ, அப்படியே வேங்கடமலையரசன் எத்தனை விக்நங்களை நாங்கள் செய்து கோபச்சூடுண்டாக்கினாலும் தன் குளிர்ச்சி ஸ்வபாவமான உன்னை (தயையை) விடுகிறதில்லை. மறுபடியும் உன்னை உன் குழந்தையாகிய நான் ரக்ஷண ப்ரார்த்தனை செய்வதை அஸஹ்யமென்று நினைத்துப் பொறுக்கமாட்டாதவளான நீ உனக்கு விளையாடும் தாமரைப்பூக்களான உன் நாதன் தாமரைக்கடாக்ஷங்களால்என்னைத்தொடவேணும்."

(தா-ம்) நான் எத்தனை சூடான கோபமூட்டத்தக்க செய்கைகளைச் செய்தாலும் அந்த உஷ்ணமெல்லாம் ஸமுத்ரஜலம் போல் அகண்டமாய் அலைத்துக்கொண்டிருக்கும் உன் வெள்ளத்தால் தணிந்துபோகிறது. பெருமாள் ஸமுத்ரத்தால் சூழப்பட்டிருக்கிறார். தயையென்னும் குளிர்ந்த பெருங்கடல் அவரைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. ஸமுத்திரத்தின்பேரில் எத்தனை வெய்யிலடித்தாலும், அது குளிர்ச்சியை விட்டுக்கொதிப்பதில்லை. ஸமுத்ரம் போன்ற தயாஜலத்தோடு கூடியவர், ஸ்ரீநிவாஸன். கடல்போல தயாஜலமிருப்பதால் உஷ்ணம் படுகையிலேயே வராமல் தடுத்துக் குளிர்ச்சியான தயாஸ்வபாவமே மாறாமல் காப்பாற்றப்படுகிறது. உன் குழந்தைகளாகிய நாங்கள் இரண்டாம் தரம் எங்கள் ரக்ஷணபாரத்தை நீதானேற்றுக்கொண்டு எங்களை ரக்ஷிக்கவேண்டுமென்று ப்ரார்த்திப்பதை நீ பொறுக்கமாட்டாய். எங்கள் கொடிய குற்றங்களைப் பொறுப்பாய், அதெல்லாம் உனக்கு ஸஹ்யம். ஆனால் இரண்டாம் தரம் ப்ரார்த்தித்தால் அது உனக்கு அஸஹ்யம், அதை நீ பொறுக்கமாட்டாய். ஒரு

[stamp]

தரம் த்[illegible]பில் கோவிந்தா என்று அலறினது பெருமாளைப் பெருங்கடனாளியாக்கிற்று. ஒரு தரம் பிரார்த்தித்ததே நெஞ்சில் பெரும் சுமையாய்க் கனத்திருக்கும்போது, இரண்டாந்தரம் தாயான தயையை பிரார்த்தித்தால் அது புண்ணில் ஊசியால் குத்துவதுபோல் அஸஹ்யமாகிறது. மறுபடியும் பிரார்த்திக்கவேண்டிய ச்ரமத்தை உனக்கும் வைக்காமல் நீ விளையாடுவதற்குத்தாமரைப்பூக்களான ஸ்ரீநிவாஸனுடைய தாமரைக் கண்கள் சொரியும் கடாக்ஷத்தாமரைப் பூக்கள் என்பேரில் விழுந்து என்னைத் தொடும்படி செய்யவேணும். (98)

த்ருஷ்டேऽபி துர்பலதியம் தமனேऽபி த்ருப்தம்
ஸ்நாத்வாபி தூளிரஸிகம் பஜனேऽபி பீமம் ।
பத்வா க்ருஹாண வ்ருஷசைலபதேர்தயே மாம்
த்வத்வாரணம் ஸ்வயமநுக்ரஹச்ருங்கலாபி: ॥ ॥ ௯௯ ॥

த்ருஷ்டேzபி துர்பலதியம் தமனேzபி த்ருப்தம்
ஸ்நாத்வாபி தூளிரஸிகம் பஜனேzபி பீமம் ।
பத்வா க்ருஹாண வ்ருஷசைலபதேர்தயே மாம்
த்வத்வாரணம் ஸ்வயமநுக்ரஹச்ருங்கலாபி: ॥ (99)

(ப-ரை) வ்ருஷசைலபதேர்தயே - வேங்கடமலையரசன் தயையே! த்ருஷ்டேzபி - கண்ணால் (உறுத்திப்) பார்க்கையிலேயே, துர்பலதியம் - கலங்கும் புத்தியுடையதும் (உடையவனும்), தமனேzபி - ஈட்டியைக் காட்டி அடக்கும்போதும், த்ருப்தம் - கொழுப்புடையதும் (உடையவனும்), ஸ்நாத்வாபி - ஸ்நாநம் பண்ணிவைத்தபிறகும், தூளிரஸிகம்- புழுதியைப் பூசிக்கொள்ளுவதில் ரஸமுடையதும் (உடையவனும்), பஜனேzபி - ப்ரீதியோடு வேண்டிய பணிவிடையெல்லாம் செய்து ஆராதிக்கையிலும், பீமம் - பயத்தை உண்டாக்கி பயங்கரமாக இருக்கும், த்வத்வாரணம்-உன் ஆனையான (உன்னை வேண்டாமென்று தடுக்கும்), மாம் - என்னை, ஸ்வயம்-நீயாகவே (நான் வேண்டாமென்று தடுத்தாலும்), அநுக்ரஹச்ருங்கலாபி: - அநுக்ரஹமென்னும் சங்கிலிகளால், பத்வா - கட்டி, க்ருஹாண - பிடித்து உன் வசமாக்கு.

ஸம்ஸாரஜ விரஜா ஸரித்— எங்கள் ரஜஸ் தமஸ்ஸுகளை எல்லாம் போக்கி திவ்யவிபூதியை உடனே அடையச் செய்யும் உன் வாக்ப்ரவாஹத்தில் ரஜஸ்ஸுக்கு ப்ரஸக்தியேது ?

ஸ்வயமேவ கோதா— 'கோதா' என்னும் சப்தம் கோதாவரீ நதியையும், ஸ்ரீவிஷ்ணுசித்தர் பெண்ணையும் சொல்லும் என்று நிகண்டு. நீ ஸ்வயம் கோதாவரியாவாய். நீ கோதாவரீ என்பதற்கு ஓர் குணவிசேஷத்தைக் கொண்டு ஆரோபிக்கவேண்டியதில்லை. நீ கோதாவரீ என்பதில் ஆரோபமில்லை. யமுனை கண்ணன் யௌவந விஹாரங்களுக்கு ஸாக்ஷி; பஞ்சவடியில் சிரகாலம் ராம வைதேஹீ விஹாரங்களுக்கு கோதாவரீ ஸாக்ஷியாவாள். ஜநகராஜன் புத்திரியாகிய ஜாநகி நீராடினதால், புண்ணியமான நீர்களையுடையதாக, கோதாவரிதீர்த்தத்தைக் காளிதாஸர் மேகஸந்தேசாம்பத்தில் வர்ணித்தார். உத்தரராமசரிதத்தில் பவபூதியின் வர்ணநங்களையும் நினைக்கவேணும்.

ஸரித: ஸந்து நத்ய: ஸரித்— இத்தனை நதிகளாக இருக்கையிலும், உன் நாயகனுக்கு நீ நர்ம பரிஹாஸவார்த்தைகளைப்பேசுவதில் உள்ள விநோதம் எல்லையற்றது. ராமாயணரஸங்களைப் பேசுகையில், ஆதிகவி 'ஹாஸ்யச்ருங்காரபீபத்ஸ' என்று ஹாஸ்யரஸத்தை முதலில் பேசினார். எங்கள் அநாதிகாலமான கொடிய அநந்த அபராதங்களினால் உள்ள சீற்றத்தை மாற்ற ஹாஸ்யரஸம்தான் சிறந்த உபாயம். அந்த நதியோ, இந்த நதியோ என்று ஓரோர் காரணத்தையிட்டு உல்லேகம். உன் காந்தனுக்கு நீ நர்மதை என்பதுதான் தத்துவம். நர்மதா த்வம் ஸரித், ஸாக்ஷிணீ । (6)

வல்மீகத: ச்ரவணதோ வஸுதாத்மநஸ்தே
ஜாதோ பபூவ ஸ முநி: கவிஸார்வபௌம: ।
கோதே கிமத்புதமிதம் யதமீ ஸ்வதந்தே
வக்த்ராரவிந்தமகரந்தநிபா: ப்ரபந்தா: ॥ ॥ ௭ ॥

வல்மீகத: ச்ரவணதோ வஸுதாத்மநஸ்தே
ஜாதோ பபூவ ஸ முநி: கவிஸார்வபௌம: ।
கோதே கிமத்புதமிதம் யதமீ ஸ்வதந்தே
வக்த்ராரவிந்தமகரந்தநிபா: ப்ரபந்தா: ॥ (7)

(ப-ரை) கோதே - கோதாய் ! வஸுதாஸுதா - பூமிப் பிராட்டிரூபமான, தே - உனது, ச்ரவணத: - செவியாகிற, வல்மீகத: - புத்திலிருந்து, ஜாத:-பிறந்த, ஸ:-அந்த, முநி:- மஹர்ஷி, கவிஸார்வபௌம: - கவிகளுக்குள் சக்ரவர்த்தியாக, பபூவ - ஆனார். (ஆகையால்), தே - உனது, வக்த்ராரவிந்த- முகமென்னும் கமலத்திலிருந்து (பெருகும்), மகரந்தநிபா: - தேன் போன்ற, இமா: ப்ரபந்தா:-இந்த ப்ரபந்தங்கள், ஸுரபயந்தி- ருசிக்கின்றன, இதியத் - என்னும் இது, கிம் அத்புதம்-என்ன ஆச்சரியம் ?

கோதாய்! பூமிப்பிராட்டியேயான உன்னுடைய காதென்று சொல்லும் வல்மீகத்திலிருந்து (புற்றினின்று) பிறந்த அந்த முநி (வால்மீகிமுநிவர்) கவிச்சக்ரவர்த்தியானார். அப்படியிருக்க, உன்னுடைய திருவாயாகிய தாமரையிலிருந்து பெருகும் தேனுக்கு ஒப்பான இப்பிரபந்தங்கள் இனிமையாயிருக்கின்றன என்பது என்ன ஆச்சர்யம்.

அவ:— (1) வால்மீகியை யல்லவோ உத்தமகவி என்பர் அவரையல்லவோ கவிகள் நல்வாக்குக்காகப் பிரார்த்திப்பர். "இதம் குருப்ய: பூர்வேப்யோ நமோவாகம் ப்ரசாஸ்மஹே" என்று பவபூதி வால்மீகியை முதலிலேயே பணிந்தார். அவர்தானே கவிகளுக்கு மார்கதர்சி. நீரும் உம்முடைய தேவநாயகன் ஸ்துதியில் 'ப்ராச: கவீந் நிகமவேதி தயோபநீதாந் ப்ராசேதஸப்ரப்ருதிகாந் ப்ரணமாமி நித்யம்' என்று அம்முநிவரைப் பணிந்தீர். பாதுகாஸஹஸ்ரத்திலும், "யஸ்யா விசுரவிந்த ஸம்பவ யதோ முநீமுபஜ்ஞாரவ ப்ரபூர் தீயபூர பாதவஸமணிநிவப்ரமீகஜந்மா கவி:" என்று அவரைத் துதி செய்து அவர் ராமாயணத்தைப் புகழ்ந்தீர். பெரியபிராட்டியாருடைய அவதாரமாகிய ஸீதாதேவியின் சரித்ரத்தைப் பாடிய கவியிலும் உயர்ந்த கவியுண்டோ ? 'கவிப்ரதமபத்ததி:' என்றல்லவோ காளிதாஸர் ராமாயணத்தைப் புகழ்ந்தார். 'ப்ராசம் கவீநாம் ஆதாரம்' என்றபடி அக்காவ்யந்தானே எல்லாக் கவிகளுக்கும் மூலாதாரம்.

(2) பெருமாள் கேட்டு மகிழும்படி பாட நான்தான் வாக்கு அளிக்கவேண்டும் என்று இச்சகம் பேசுகிறீர். ராமாயணம் 24000- சுலோகங்களையும் பெருமாள் 'பவிஷ்யதி ச்ரோதுகாமோ ப்ருஹஸ்பதே' என்றபடி தன் ஸத்தையும் பாரணமும் அதனால் தானென்று 'மஹாநுபாவம் சரிதம்' என்றும், 'உதாரம் வ்ருத்திகாரம்' என்றும் புகழ்ந்துகொண்டு கேட்கவில்லையோ. என் விஷயமாக ஓர் சின்ன ஸ்துதி பண்ணுவதற்கு என்னையே வாக்ஸிக்ஷை கேட்கிறீரே.

(3) ஓரிரவில் பாதுகாஸஹஸ்ரம் பாடி அதைப் பெரியபெருமானை திருவோலக்கத்தில் தூக்கத்தைதூரத்தில் தள்ளி லக்ஷ்மியோடு கூடத் திருச்செவி சாற்றவில்லையோ. அந்தப் பாதுகாஸஹஸ்ரத்திற்கு திவ்யவாக்கை வால்மீகியைப் பிரார்த்தித்தடையவில்லையோ. அதற்கு என்னைக் கூப்பிடவில்லையே. ஸமயத்திற்குத் தகுந்தபடி பேசுவது அழகோ. நான் கவியா ? அவர் கவியா ? இதற்கெல்லாம் பதில் இங்கேகூறுகிறார். வால்மீகி ஆதிகவி என்பதும், அவரை மற்றக் கவிகள் பணிந்து வாக்கைப் பெற்றனரென்பதும்உண்மையே. அடியேனும் அவரைப் பணிந்து யாதவாப்யுதயம் பாடினேன். பாதுகாஸஹஸ்ரமும் பாடினேன். பெருமாளும் அவர் ஸீதைப்பிராட்டிவிஷயமாய்ப் பாடிய ஆதிகாவ்யத்தை இன்புறக்கேட்டருளினார். நான் இப்பொழுது உன்னைப் பிரார்த்திப்பதற்கும் நான் முன் வால்மீகியைப் பிரார்த்தித்ததற்கும் ஓர் விரோதமுமில்லையே அம்மா! வால்மீகியைப் பிரார்த்தித்துக் கவிதை பெற்றதைக் கொண்டு கைமுத்யத்தால் உன்னைப் பிரார்த்தித்து வாக்குப் பெறவேண்டியதற்கு ஔசித்யம் ஸித்திக்கிறதே. வாதத்தில் இதுபோன்ற உன் கேள்வியை 'சுற்கத்தில் போது விடிந்ததுபோலும்' என்பரம்மா. வால்மீகி யாரம்மா? வல்மீகத்தில் பிறந்தவர்தானே. வல்மீகம் என்பது என்ன அம்மா? 'வஸுதா ச்ரோத்ரம்'தானே. பூமிதேவியின் காது (ச்ரவணம், ச்ரோத்ரம்). நீதானே பூமிதேவி. உன் செவியிற்பிறந்த மஹிமையாலே அவர் கவிஸார்வபௌமரானார். உன்னுடைய குழந்தை (அம்சம்) ஸ்ருஷ்டிதானே அவர். அவர் கவிதாசக்திக்கு நீதானே மூலம்,ஆதாரம். உன்னை த்யானித்துக்கொண்டுதான் யாதவாப்யுதயமும் பாதுகாஸஹஸ்ரமும் பாடினேன். 'வஸுதா ச்ரோத்ரஜ தஸ்மிந்'

என்று உன் ச்ரோத்ரத்தில் பிறந்தவரென்றுதானே அவரை ஆரம்பத்தில் இரண்டாவதுச்லோகத்தில்புகழ்ந்தேன். அப்படியே பாதுகாஸஹஸ்ரத்திலும்'வஸுதாச்ரோத்ரஜந்மா முநிர்மே'என்று உன் மூலமான புத்ரஸம்பந்தத்தைப் பேசிக்கொண்டேதானே திவ்யவாக்கின் அநுக்ரஹத்தை யாசித்தேன். உன் ச்ரோத்ரத்திலிருந்து பிறந்த கவி பாடின க்ரந்தமானதால், ராமாயணம் முழுவதையும் பரிஷத்தில் பெருமாள் இன்புறக் கேட்டார்.

(4) இப்படிப் பதில் சொல்லுவது அழகாயிருந்தாலும் ஓர் கேள்வி கேட்கிறேன். அதில் நீர் அகப்பட்டுக்கொண்டே தீரவேணும். ஸீதைப் பிராட்டியார் தன்னுடன் பிறந்தவரான (ஸஹஜரான) கவீச்வரரைக்கொண்டு தன் சரித்ரமான ராமாயணத்தைப் பாடிவைத்தாளென்று பாதுகாஸஹஸ்ரம் முடிவில் பாடினீரே. இப்பொழுது ராமாயணகாவ்யம் என் மூலமென்கிறீரே. இந்த விரோதத்தை எப்படிப் பரிஹரிப்பீர். பெரிய பிராட்டியார் எனக்கு அம்சி, நான் அம்சம். அம்சத்திற்குள் அம்சி யடங்குமோ. அம்மா இந்தக் கேள்வியும் ஸுபரிஹரம். நீ பெரியபிராட்டியாருடைய அம்சமாயிருந்தபோதிலும், பெரியபிராட்டியாருனிடமுள்ள நிரதிசயப்ரீதியால், உன்பெண்ணைகப் பிறந்து உன்னை பஹுமாநித்து உனக்குச் சேஷமாயிருக்கும் ரஸத்தை அநுபவிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டு பூமிஸுதையாக (உன்பெண்ணாய் ஸீதையாக) அவதரித்தாள். அந்த அவதாரத்தில் பெரிய பிராட்டியார் இச்சாவசத்தால் அம்சாம்சி பாவம் மாறிவிட்டது. நீ அம்சியும், ஸீதை உன் அம்சமான புத்திரியுமானாள். தாயும் அம்சியுமான நீ பாடிவைத்ததைத் தானே அங்கே ஸீதை பாடிவைத்ததாக ஔபசாரிகமாகப் பேசினேன். 'ஸஹஜேந கவீச்வரேண' என்றதால் இது வ்யஞ்ஜிதம். வால்மீகிக்கும் ஸீதைக்கும் ஸஹஜத்வம் எப்படி? பூமிதேவியே! நீ, உன்னிடமிருந்து இருவரும் பிறந்தாரென்பதுதானே. உன்னிடம் பிறந்தவர் ஸஹஜகவி. கவீச்வரியான தாயாருடைய பிள்ளைதானே ஸஹஜகவீச்வரரானார். 'கரிணீ' தானே களபத்தைப் பெறும். தாய் வேறு ஜாதி குட்டி வேறு ஜாதியாமோ? நீ கவீச்வரீ, உன்னிடம் ஜாதர் கவீச்வரர். 'மாதரம் த்விபதா இதி'. ஆண்பிள்ளைகள் தாய் ஸ்வபாவத்தை அநுஸரித்திருப்பர். ஆகையால் விரோதம் இல்லை அம்மா!

உபாயோபேயதயா என்பது ஆச்ரயே என்பதோடே அந்வயிக்கிறதென்றும், ஸம்ச்ரிதஸ்ய என்கிறவிடத்திலே ச்ரியா ச ஸந்நிதியிலே அந்வயிப்பதில்லையென்றும் இவருடைய பக்ஷத்தில் உபாயோபேயதயா என்பதை பஹுவ்ரீஹியும் ஆகர்ஷிப்பதற்காக ஆகாங்க்ஷை கல்பிக்கவேண்டும். அந்தக் கல்பனமானது ஆச்ரயே என்பதால் மட்டும் ஆகாங்க்ஷா சாந்தியில்லாமையால் அன்றோ? அப்பொழுது ஸம்ச்ரிதஸ்ய என்கிறவிடத்திலும் ஸ்வயம் ஸம்ச்ரிதஸ்ய என்று ஆகாங்க்ஷை அத்யாஹ்ருதையாகையால் உபாயோபேயதயா ஸம்ச்ரிதஸ்ய என்று ஸித்திக்கும். இல்லையேல் ஆச்ரயே என்பதிலும் அந்வயிக்கமாட்டாது. நாம் சொல்லிய உத்தராந்வயம் ஸ்வரஸமாய் ஸித்திக்கிறது. நிற்க, வ்யாக்யாதாக்களின் திருவுள்ளத்தையும் பராமர்சிப்போம்.

"ஸஹவஸ்வ்யா நந்த்யஸிஷீம் ச்ரியம் ஸாதரவ்யாக்ஷ வாத்ஸல்யாதிகுணாந் அவயவாநேந புருஷகாரதயா சரணம் ப்ரபத்யே இத்யர்த்த:"

என்றும், மேலே உத்தரவர்ணாந்வயவிவரணத்தில் ச்ரியா ச ஸஹிதாய என்கிறவிடத்தில்

"சரணவரணகாலே புருஷகாரபூதயா லக்ஷ்ம்யா ச ஸம்ச்லிஷ்டாய"

என்றும் சதுச்லோகீவ்யாக்யாநபணிதிகள் உதாஹரிக்கப்பட்டன. இதில் புருஷகாரதயா என்பது உபாயோபேயதயா என்பதற்குப் பொருளாக அமைகிறது. வாக்யசேஷமிருக்கும்போது அத்யாஹார ஸித்தமென்பது உசிதமன்று. புருஷகாரபூதயா லக்ஷ்ம்யா ச ஸம்ச்லிஷ்டாய என்று அருளிச்செய்திருப்பதும் உபாயோபேயதயா என்பதற்கு ச்ரியா ச என்பதோடு அந்வயதாத்பர்யத்தினாலன்றோ? உபாயோபேயதயா என்கிறவரையில் பூர்வவர்ணாந்வயவிவாதமுள்ளது என்று தாமே சொல்லிவிட்டு, உபாயோபேயதயா என்பது ச்ரியம் ஸம்ச்ரிதஸ்ய என்றவிடத்தில் ஒருபடியாலும் இணங்கக்கூடாது என்கிற வலிதான வெண்ணத்தோடே அதை உத்தரார்த்தத்தில் கொண்டுபோய் உபந்யஸித்திருக்கிறார்

பட்டர் என்று இவர் தாமே சொல்லுகிறார். பூர்வார்த்தத்தில் விந்யஸித்தருளினால் பூர்வவாக்யத்திலுள்ள பதத்துடன் அந்வயம் வந்துவிடும் என்பதற்காக உத்தரார்த்தத்தில் விந்யஸித்தருளியிருந்தால் பூர்வவாக்யாந்வயம் இவருக்கு எப்படி ஸ்ரீபட்டருக்கு அபிமதமாக ஆக்கமுடியும்? அஷ்டச்லோகீவ்யாக்யானத்தில் இஷ்டோபாயதயா என்பதற்கு ஸம்ச்ரித்ய என்பதோடும் ச்ரியா ச என்பதோடும் அந்வயம் அபிமதமென்று ஸ்பஷ்டமாகிறது. இவ்விரண்டிடத்திலும் அந்வயம் கூடாதென்பது இவர் ஸித்தாந்தம். வ்யாக்யானபங்க்திகள் இவருக்கு நேர்விருத்தமாகவிருக்க அதை உதாஹரித்தது ஸாதிகளேபுணி வேதாஸ்வாதநமாய் முடிந்தது. நாம் முன் கூறியபடி இஷ்டோபாயதயாவென்பது உத்தரவாக்யத்தில் அந்வயிக்கிறதாகவுமாம். பூர்வவாக்யத்திலும் அந்வயிக்கிறதாகவுமாம். இப்பக்ஷத்தில் இஷ்டோபாயதயா ஸம்ச்ரித்ய இஷ்டோபாயதயா ஆச்ரயே இஷ்டோபாயதயா ச்ரியா ச ஸஹிதாய என்று யோஜனை. முதல் இஷ்டோபாயத்வம் புருஷகாரத்வரூபம். மற்றது ஸஹோபாயத்வரூபம். "அநந்யஜைவ ச்ரவணாத்வத்தாவிவாஹிதா நாவத்திவிபர்யத ஸர" என்று 'ஸ்யாதேவ கஸ்ய ப்ரஸாதஸ் ச' என்கிற ஸூக்தி ஸ்ரீபாஷ்யத்தில் ஸாதிக்கப்பட்டது. தத்ஸ்தத் இது ஸாமாந்ய சப்தமாகையால் ப்ரகரணாதிகளால் ஸங்கோசமாத்ரமத்தனை. இஷ்டோபாயதயா என்பதை பூர்வவாக்யத்தில் விந்யஸித்தால் ஸம்ச்ரித்ய என்பதோடு அந்வயிக்கில் அந்த இஷ்டோபாயத்வம் புருஷகாரத்வரூபமாகையாலே பிராட்டிக்கு தாவந்மாத்ரமே உளது. ஸோபாயத்வமில்லை என்று வாதம் கிளம்பும். உத்தரார்த்தத்தில் விந்யஸித்தால் அநந்யார்ஹபரதந்த்ரமான ஸம்ச்ரயே என்ற இடத்திலும் ஸ்ரீக்கு அந்வயம் வாக்யசேஷந்யாயஸித்தமாகும். உத்தரார்த்தத்தில் கைங்கர்யமே ப்ரார்த்திக்கப்படுவதால் இஷ்டமானது சேஷவ்ருத்தம் என்றும் ஸித்திக்கும் என்பது ஸ்ரீபட்டர் திருவுள்ளம். ச்ரியா என்பதோடு இஷ்டோபாயதயா என்பதற்கு அந்வ

யம் என்பது வ்யாக்யாதாக்களுக்கும் நமக்கும் துல்யம். வ்யாக்யாத்ருபக்ஷத்தில் இஷ்டோபாயத்வம் புருஷகாரத்வரூபம். நம் பக்ஷத்தில் ஸஹோபாயத்வரூபம் என்பதுதான் விசேஷம். இவ்வளவு ஸித்தாந்தத்திற்கு அநுகூலமான ஸ்ரீபட்டர் ஸூக்தியை இவர் உதாஹரிக்காமல் விட்டுவிட்டால் ஸித்தாந்திகள் இதைத் தங்களுக்கு ஸாதகமாக உதாஹரிக்கும் பக்ஷத்தில் இதை ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ரர் கல்பித்துவிட்டார் என்று சொல்லிவிடலாம். இவரே உதாஹரித்து விட்டாரே, இனி பட்டர் ஸூக்தியன்று என்று மறுக்கவொண்ணாதே.

ஸ்ரீபராசரபட்டார்யஸூக்திரேஷா விஹீயஸீ ।
ஸ்ரியோऽபி சேஷோபாயத்வே ப்ரமாணம் கிம் தத: பரம் ।
ஸ்ரீபட்டாரககாவ்யக்ருதிஷு பாதமீதமீர்யதாம் ॥

மூன்றாவது அதிகாரம்.

ப்ரதிஹ்ருதோத்ரரோத்ர ஸாஹஸமயஸம்யநஷ் ।
ப்ரோணவாரதத்ராணாம் ஹோவஷ்ஷ ந ஹி சோபதே ॥

இனி ஐதிஹ்யங்களைப் பற்றி விசாரிப்போம். த்வயத்தின் பூர்வவாக்யத்தில் ச்ரிய: உபாயத்வம் உபலக்ஷணரூபம் என்றும், உத்தரவாக்யத்தில் அது விசிஷ்டரூபம் என்றும், தாத்பர்யகல்பனத்திற்கு என்ன நிபந்தனமென்று சிலர் கேட்கிறார்கள் என்கிறார். இவர் பக்ஷத்தில் பூர்வவாக்யத்திலும் விசிஷ்டம் ச்ரிய: உபாயத்வமாகையால் அந்த சப்தத்துக்கு என்ன ப்ரஸக்தி? அந்த தாத்பர்யகல்பனம் நம் யாரோ சில ராமாநுஜதேசிகர் கொள்கையன்றோ?

'அஹம் மத்ப்ராப்த்யுபாயோ வை ஸாக்ஷால்லக்ஷ்மீபதி: ஸ்வயம்' என்று இவருதாஹரித்த ஸநத்குமாரவசனத்திலும் லக்ஷ்மீபதிக்கே உபாயத்வம் ஸ்பஷ்டமாயிருப்பதால் அஸதி பாதகே விசிஷ்டவிஷயிக்கு விசேஷணாவயமும் ந்யாயஸித்தமாகையால்

“ கர்மணா மநஸா வாசா தேவதேவம் ஜநார்தநம் | ப்ரஸந்ந ஶரணம் ஸ்வ மாம் ச தத்ஸமர்பயிஷ்யதி ” இது முதலான ஸமாஶ்ரயவசநாந்தரங்களுக்கு ஆநுகுண்யம் இருப்பதாலும், இதை அகல்பிதவசனமாகக் கொண்டாலும் ஜிஜ்ஞாஸுகளுக்கு ஸாதகமேயல்லது பாதகமல்ல.

பூர்வவாக்யஸ்தமான ஶ்ரீமத்பதம் க்ரியாந்வயியாகிப் பிராட்டிக்கு ஸஹகாரித்வமான உபாயபாவத்தை ஸாதித்துக் கொடுக்கின்றதென்று கொண்டால் அப்பிராட்டி தனக்கு உபேயத்வம் தத்க்ரதுந்யாயத்தால் ப்ராப்தமாதலால் உத்தரவாக்யத்தில் மீண்டும் ஶ்ரீமத்பதநிவேஶநம் வேண்டாவே விஶேஷ்யமாத்ர நிவேஶமே போதுமாய்த்து என்று எங்களாழ்வான் பணிப்பராம். பூர்வவாக்யத்தில் நாராயணனுக்கு உபாயத்வமுண்டு என்று கொண்டால் அந்நாராயணன் தனக்கு உபேயத்வம் தத்க்ரதுந்யாயத்தால் ப்ராப்தமாதலால் உத்தரவாக்யத்தில் மீண்டும் நாராயணஶப்தம் வ்யர்த்தம். நமஶ்ஶப்தார்த்தத்துக்காகில் ஶ்ரீமதே என்று அமையும். நாராயணாய என்பது அந்வயார்த்தகமே. இப்பக்ஷத்திலும் ஶ்ரீமதே என்பது ஸார்த்தகமாயிற்று.

த்வயத்திலும் ஶ்ரீமத்பதம் ஸமாநமாயிருக்க, முன்னே உபாயகார்யோபேயத்வமும், பின்னே உபாயகார்யமுமாக வ்யவஸ்தை பண்ணுகைக்கு நியாமகம் ஏதென்று ஆச்சான் கேட்க பாதகப்ரமாணஸத்பாவாஸத்பாவங்களே நியாமகமென்று பிள்ளான் அருளிச்செய்தாராம்.

சரணம் என்று நிர்தேஶிக்கவேண்டியிருக்க, சரணௌ என்று த்விவசநாந்தநிர்தேஶம் பாதகம்என்று அருளிச்செய்யவில்லையே? பாதகப்ரமாணஸத்பாவாஸத்பாவங்கள் நியாமகங்கள். என்று கூட அறியாமல் ஸ்வேச்சாகல்பிதமான ,வ்யவஸ்தையோ என்று அபிப்பிராயத்தால் ஆச்சான் ப்ரச்னமிருக்காதே? ஸாதகபாதகப்ரமாணவிஶேஷம் எது என்று விசேஷப்ரச்நத்திற்கு பாதகப்ரமாணஸத்பாவாஸத்பாவங்கள் என்று ஸாமாந்யேந ஸமாதானம் அருளிச்செய்திருக்கமுடியுமா?

நாராயணனுக்குச் சொன்ன உபாயத்வம் நாரங்களுக்கும் வரவேண்டி வருமாகையால் பிராட்டிக்கு விஶேஷணவிதயா உபாயத்வப்ரஸஞ்ஜநமநாவஶ்யம் என்று வங்கீபுரத்து நம்பிகள் பணித்தாராம்.

நாராயணனுக்குச் சொன்ன உபேயத்வம் நாரங்களுக்கும் வரவேண்டியதாகையால் பிராட்டிக்கு விஶேஷணவிதயா உபேயத்வமில்லை என்று நம்பிகள் திருவுள்ளம்போலும். இந்த ஐதிஹ்யத்தினால் உபலக்ஷணத்வபக்ஷமே நம்பிகளுக்கு அபிமதம் என்று ஸித்திப்பதால் இவருடைய விஶேஷணத்வபக்ஷத்திற்கும் ஸஹகரிக்கவில்லையே.

அவையெல்லாம் ஸ்வதஃ அவிஶ்வஸநீயங்களே என்று தாமே கைவிட்டிருக்கும் ஐதிஹ்யங்களை ப்ரமாணங்களாக உதாஹரித்ததற்குப் பயன் யாதோ?

ஏவமேவ சரித்ரஸ்தாந்யைதிஹ்யாந்யுபாயநே |
பாதிதப்ராயபக்ஷாணீத்யேவமத்ர நிரூபிதம் ||
ஐதிஹ்யநிஸ்தாரோ நாம த்ருதீயோऽதிகாரஃ ||

நான்காவது அதிகாரம்.

லக்ஷ்ம்யா ஸஹேதி தத்ரோக்த்யா ந்யாயேநாநுக்ருஹீதயா |
ஶ்ரியோऽபி ஸித்தோபாயத்வமீஶதௌல்யம் ப்ரஸாத்யதே ||

பிராட்டியின் ஸித்தோபாயத்வத்தில் உதாஹ்ருதஶ்ரீஸூக்திகளே பர்யாப்தங்கள் என்பது நிரூபிக்கப்பட்டது. மேலும், அவ்வர்த்தந்தன்னையே ப்ரமாணவசநத்தைக் கொண்டும் த்ருடப்படுத்துகிறோம்.

ப்ரக்ருதஸூக்தத்தில் ‘ தாரேஸ ஸஹ தமாநய ’ என்றால் பத்நீயையும் அழைத்து வரும்படியாகச் சொல்லுகிறான் என்கிற போதம் நியமேந உண்டாகிறது. ஆக இப்படிப் பல வகைப்பட்ட ப்ரயோகங்களையும் கொண்டு நாம் ஆராய்ந்தால், ‘ ஶ்ரீசரணாஶ்ரயம் ஸஹ நாராயணசரணௌ ஶரணம் ப்ரப

த்யே' என்றோ, 'ஶ்ரியா ஸஹ நாராயணம் ச ஶரணம் ப்ரபத்யே' என்றோ இருந்தாலொழிய ஶ்ரீக்கு ப்ரபத்தவ்யதாரூப க்ரியையில் அந்வயம் ஏற்படமாட்டாது என்றும், 'ஸமிகரேண ஸஹ ராஜா த்ருஶ்யதே ஸ்ம' என்று சொன்னால், த்ருஶ்ய க்ரியையில் ஸமிகாரத்திற்கு கர்த்ருத்வமோ கர்மத்வமோ அந்வயம் ஏற்பட்டே தீரவேண்டிய நிர்ப்பந்தமுண்டு" என்றும், "புத்ரேண ஸஹ ஆகத: பிதேத்யாதௌ ஶ்ருதிபரேண ஸஹஶப்த: க்ரியாந்வயநியத: ஸஹ:" என்றும், ஸஹஶப்த ப்ரயோகமிருக்குமிடங்களில் க்ரியாந்வயநியதமும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறே 'ஸதாயாஸ்த்வ ச ஶரணம் நஶ்ரா ணயது' என்கிற உதாஹ்ருதஸ்தூர் ஶ்ரீஸூக்திக்கு மூலபூதமான "கருணா பூர்ணவாசா வாசா தேவதேவம் ஜநார்தநம் | ப்ரஸந்நஶரணம் ஸஹ ஶரம் ச தஸ்யாபி ஶ்ருணீஷ்வ" என்கிற லக்ஷ்மீ தந்த்ரவசனத்தில் ஸஹஶப்தமன்றியில் ஶ்ரீக்கு ப்ரபத்தவ்யதாரூபக்ரியாந்வயநியமம் ஏற்படுவதை இசைந்தாகவேண்டும். ஸஹஶப்தகடிதமான ப்ரயோகமும் நிரூபிக்கப்படுகிறது.

அஹம் த்வயா ஸஹ ஸர்வேஶோ தேவ்யா காருண்யரூ பயா | ரக்ஷகஸ்ஸர்வஸித்தாந்தே வேதாந்தேऽபி ச கீயதே ‖

என்று லக்ஷ்மீதந்த்ரவசனம். இதில் ஶ்ரியா ஸஹ நாராயணம் ச ஶரணம் ப்ரபத்யே என்கிறவிடத்தில்போல் அஹம் த்வயா ஸஹ ஸர்வேஶோ ரக்ஷக: என்று ஸஹ ஶப்த ப்ரயோகமிருப்பதால் லக்ஷ்மீக்கு ரக்ஷணக்ரியாந்வயம் ஸுஸ்பஷ்டமாகிறது. இங்கு ரக்ஷணஸாதநகாரும் ஸஹஶப்தாயுதமாகையால் லக்ஷ்மீகர்த்ருக ரக்ஷணஸாதநகாரிகாரக்ஷணகர்த்தா ஸர்வேஶ: என்று ஸர்வஸித்தாந்தத்திலும் வேதாந்தத்திலும் கானம் செய்யப்படுவதாக அர்த்தம் ஸ்பஷ்டமாகிறது அன்றோ. புத்ரேண ஸஹாகத: பிதா என்றால் வருகிறவர்கள் இருவர்கள் என்பதை அபலபிக்க முடியாது என்று இவர் தாமே எழுதிவைத்திருப்பதால் அவ்வாறே அஹம் த்வயா ஸஹ ஸர்வேஶ: என்கிற இடத்திலும் ரக்ஷகர்கள் இருவர் என்பது ஸந்தேஹம் பண்ணக்

கூடியதன்று. இங்கு ரக்ஷகத்வம் ப்ரபத்திஸமுதாயக்ஷவ்யாபாரவிஷமாகில் இவர் பக்ஷத்தில் பிராட்டிக்கு அது அஸம்பாவிதம். ஸாக்ஷாத்காரத்வமாகில் இது நாராயணனுக்கு அநபேக்ஷிதம். ஸாக்ஷாத்காரக்ருத்யமும் ரக்ஷணஸங்கல்பமும் விஜாதீயங்களாகையால் ஸாதநகாரிகங்களாகச் சொன்னது பொருந்தாது. மேலும் ரக்ஷக என்கிற ஶப்தம் ஒரு ப்ரயோகத்தில் இரண்டர்த்தங்களையும் போதிக்கமாட்டாது. இவ்வசனமானது ஸ்துதிபரமன்றிக்கே ஸ்வார்த்தபரமாகையால் அந்யதாஸித்தி சொல்லவொண்ணாது. ஸர்வஸித்தாந்தத்திலும் வேதாந்தத்திலும் அப்படியே சொல்லியிருப்பதாக இவ்வசனமே சொல்லுவதால் ப்ரமாணாந்தரங்களைக் கொண்டு பாதிக்கவும் முடியாது. ஆகையால்தான் ஸ்ரீதேசிகனும் ஸித்தோபாயஶோதநாதிகாரத்தில் "அஹம் த்வயா ஸஹ ஸர்வேஶ:........கீயதே' என்கிறபடியே ஸபத்நீகனைக்கொண்டு ஸர்வரக்ஷணயஜ்ஞதீக்ஷிதனான ஸர்வேஶ்வரனுக்கு ஶ்ரீபாஷ்யத்திலே சொல்லுகிற பத்நீஸம்பந்தத்தில் வரும் கலக்கங்களுக்கு திங்மாத்திரத்தாலே பரிகாரம் காட்டுகிறோம்" என்றாரம்பித்து மஹாப்ரகரணத்தினால் ஶ்ரீக்கு ஸித்தோபாயத்வத்தை நிஷ்கர்ஷித்தருளினர். உபாயாதிகாரத்திலும் ஶ்ரீஶப்தத்திற்கு ஶ்ரீயதே ஶ்ரயதே ஶ்ருணோதி ஶ்ராவயதி ஶ்ருணாதி ஶ்ரீணாதி என்று ஆறுபடியான ஸம்ப்ரதாய ஸித்த நிர்வசனங்களுக்கு ஸாமஞ்ஜஸ்யம் பண்ணும்போது முதல் நான்கு நிர்வசனங்களுக்கும் ஸாக்ஷாத்காரபாவத்திலே நோக்கம் என்று அருளிச்செய்து 'ஶ்ருணாதி நிகிலாந் தோஷாந்' என்று வ்யுத்பத்தியானபொழுது, அஹம் த்வயா ஸஹ ஸர்வேஶ: ....கீயதே' என்றும், 'வேரிமாறாத பூமேலிருப்பாள் வினை தீர்க்கும்' என்றும் சொல்லுகிறபடியே உபாயாதிகாரிகளுக்கு விரோதிகளான கர்மாதிகளைக் கழிக்கும் என்றதாம்" என்று அருளிச்செய்தார். இங்கு ப்ரமாணமாக உதாஹரிக்கப்பட்ட வசனங்களில் ஶ்ருணாதி நிகிலாந் தோஷாந் என்பது ஸர்வாபராதேப்ய: மோக்ஷயிஷ்யாமி என்கிறாப்போல், ப்ர

ஷிவிரோதி நிவர்த்தகத்வத்தைத் தெரிவிக்கின்றது என்பது ஸ்பஷ்டம். லக்ஷ்ம்யா ஸஹ என்கிற வசனத்திலும் ரக்ஷகத்வமானது அநாத்யந்தாவஹார இஷ்டப்ராப்தி ரூப ஸ்ரீரஸிணீதி ரோபாதாநஸஹ நிவர்த்தகத்வம். 'இஷ்டப்ராபண அநிஷ்ட நிவாரண லக்ஷணா' (ரக்ஷா) என்று ஸ்ருதப்ரகாசிகா. இப்படி ஸாக்ஷாத்தாக மோக்ஷப்ரதத்வம் ப்ரதிபாதிதம். வேரி மாறுத என்கிற ஆழ்வார் ஸூக்தியிலும் 'வினை' பதமானது அஸங்கோசவ்ருத்தியால் ஸர்வவிரோதிவாசகத்தை போதிப்பதால் தந்நிவர்த்தகத்வம் ஸ்வரஸமாக பிராட்டிக்கு ப்ரதிபாதிக்கப்படுகிறது. ஸ்ரீ ஹிம்ஸாயாம் என்று நிஷ்பந்நமான இப்பதத்திலும் ஸர்வவிரோதி நிவர்த்தகத்வம் ஸ்வரஸதயா போதிக்கப்படுவதை பாதிக்கவொண்ணாது. இப்படி ஸர்வவிரோதி நிவர்த்தகத்வபரமான இந்த வசனத்தில் சொல்லப்பட்ட ஸத்ரு ஸம்பந்தத்தோடு விஸிஷ்டனைக் கொண்டு நாராயணன் இருக்கும் நிலைமை ஸ்ரீபாஷ்யத்தால் போதிக்கப்படுவதாக ஸ்ரீதேஸிகனாலே அருளிச்செய்யப்பட்டதனால் ஸ்ரீபாஷ்யத்தில் சொல்லிய வைஸிஷ்ட்யம் க்ரியாஸமபிவ்யாஹாரமே என்று திருவுள்ளமென்பது ஸூசிக்கிறது. இங்கு விஸேஷணத்வம் எப்படிப்பட்டதென்பதை விஸிஷ்டஸ்வரூபதாவிசேஷமென்னும் உபரிதநாதிகாரத்தில் நிரூபிப்போம். இந்த லக்ஷ்மீதந்த்ரவசநார்த்தம் ந்யாயாநுக்ருஹீதமென்பதை நிரூபிக்கிறோம். கார்யகாரணத்தில் ஸ்ரீஜ்ஞவிஸேஷ நிர்தேஸாதிகரணத்தில் பத்நீக்கும் ஸாஜாத்யாநத்தில் கர்த்ருத்வம் உண்டு என்று நிர்ணயித்து அந்தராதிகரணத்தில் அந்த கர்த்ருத்வம் தம்பதிக்கு வ்யாஸக்தம் என்று ஸித்தாந்தம் செய்யப்பட்டது. எங்ஙனே என்னில், ஸமர்த்தாகாரஜேத உபாஸ்தாதிகளில் வாஸ்ரீஜ்ஞாதி தேஸமிருப்பதால் வஸாஸோமஹேத என்கிற இடத்தில்போல ஸ்ரீ ஜ்ஞ விஸேஷம் விவக்ஷிதம் என்று சொல்லவேண்டியிருக்கிறது.

189900

என்பதுவிதேயம். லக்ஷ்மீயென்பது ஒரு வஸ்துவான பொம்மை கூட அன்று; பெருமாளுடைய சக்தி என்னும் தர்மமாத்ரமே என்பது சக்தித்வபக்ஷம். இதையும் 'து' விலக்குகிறது. ஸ்ரீயென்னும் வஸ்துவோடுதான் தாம்பத்யம்; ஓர் தர்மத்தோடு அல்ல. பதியும் பத்நியும் அத்யந்தம் ஸமர். பத்நீக்கு பதிபாரதந்த்ரியமில்லை. இது ஸாம்யபக்ஷம். 'ஸ்ரியா ஸஹ' என்று ஸஹயோகத்தால் கிஞ்சித் அப்ராதாந்யம் காட்டப்படுகிறது. 'து' என்று ஸாம்யபக்ஷத்திற்கும் வ்யாவ்ருத்தி. "தாம்பத்யம் நித்யமாயுண்டு. 'தம்பத்யோ: ஸஹாதிகார:' என்பதையும், 'ஸஹத்வம் ஸர்வ கர்மஸு' என்பதையும் ஆதரிக்கமாட்டோம். 'ஸ்ரீமந்நாராயணன்' என்பதற்கு ஸ்ரீவியுக்தநாராயணன் என்று பொருள். ஸ்ரீவியுக்த நாராயணனைக் கால்பிடிக்கவேணும் திருவில்லாத்தேவைத்தான் கால்கட்டவேணும்" என்னும் பக்ஷத்தையும் தள்ளுகிறது. இப்படித் தள்ளுகையில் 'தாம்பத்யம்' லோகவேதப்ரஸித்தமாய் தம்பதிகர்மமான தாநம், தீக்ஷாவ்ரதம், ப்ரஜாரக்ஷணம் நஷ்டப் பிரஜைகளை மீட்டு வீட்டுக்குக் கொணர்வது முதலியன. 'தம்பத்யோ: ஸஹ' என்பதையும், 'லக்ஷ்ம்யா ஸஹ' என்னும் வசனத்தையும் ஸூசிக்கிறார். 'ச்ரியா விநா தான் ரக்ஷா தீக்ஷா நிர்வஹணம், மோக்ஷதாநம் என்னும் தாம்பத்யரூபகர்ம", என்னும் பக்ஷத்தை ஒதுக்கி 'ச்ரியா ஸஹ தாம்பத்யகர்ம' என்று ப்ரதிக்ஞை. 'மோக்ஷ தாநம், ரக்ஷா தீக்ஷை முதலிய தாம்பத்யகர்மம் பத்நீ சேராமல் நடக்கிறது' என்று பூர்வபக்ஷம். 'வதுவில்லாமல் விவாஹம், என் தாயார் அபுத்ரர்' என்றும் வ்யாஹதப்பேச்சின் நிஷேதார்த்தம் அநுவாதம். 'ச்ரியா விநா' என்பதை நிஷேதித்து 'ச்ரியா ஸஹ து' என்று பேச்சு. பத்நீ விதுரஸ்தையல்லவே. பக்ஷங்கள் போகட்டும். ஸாம்யைக்ய சக்தித்வங்களைப்பேசும் வசனங்களுக்கு என்ன கதியென்ற சங்கையை இரண்டாவது 'து' நிவர்த்தித்து அவ்வசனங்களுக்குக் கதியைக் காட்டுகிறது. 'ஸஹ' என்பதால் வ்யக்திபேதம் ஸாதிக்கப்படுகிறது. 'ஸஹத்வம் ஸேஷஸ்ரீகாரி'

A. V. Gopalacharya.
Editor.

ஸ்ரீ தயாஸதகம் உரையுடன் வெளிவரும்படி நியமித்த ஸ்ரீமான் Professor சித்ரகூடம் ராமானுஜாசார்யஸ்வாமி பரமபதமடைந்தார் என்று கேட்டு மிக்க வருந்துகிறோம். இவர் ஸ்ரீதயாஸதகம் உரையை ஸ்திரீகளும் பாலர்களும் அறியுமாறு நமது ஸபையின் ஸஞ்சிகையில் வெளிவரும்படி செய்தது ஸ்ரீவைஷ்ணவ உலகிற்கோர் பேருதவியாகும். அவர் குடும்பத்திற்கு நம் அநுசோசனத்தை அறிவிக்கிறோம்.

Registered No. M. 3343

ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்தி ஸம்ரக்ஷண ஸபா, ஸ்ரீரங்கம்.

ஷை ஸபையின் சந்தாதார்கள் தலைமை, கிளை ஆபீஸ்களில் சேர்ந்தவர்கள் அந்தந்த ஆபீஸுக்கு நேரிலோ, மணியார்டர் மூலமாகவோ, ஏஜண்டு மூலமாகவோ தாமதமன்னியில் சந்தா பாக்கிகளைச் சேரும்படி செய்யவேண்டும். வருஷம் முடியும் ஸமயத்தில் ஸஞ்சிகைகள் வேண்டாமென்று சிலர் சொல்வது உசிதமாகாது. அவர்கள் சந்தாவை செலுத்தி பாக்கி இரண்டு மாத ஸஞ்சிகைகளைப் பெற்றுக்கொண்டு பின்பு இஷ்டத்தை ஷை ஆபீஸ்களுக்குத் தெரிவிக்கும்படி பிரார்த்திக்கிறோம்.

சந்தாதார்கள் விலாஸமாறுதல்களை உடனே தெரிவித்தால் ஸஞ்சிகைகள் தவறாமல் சேருவதற்கு அனுகூலமாகும்.

(Sd.) பரவஸ்து, ஸ்ரீநிவாஸதாஸன்.

ஸ்ரீவைஷ்ணவ ஸமய ஸாரம்— இந்நூல் திருப்பாப்புலியூர் (Structural Engineer (இஞ்ஜினீர்) ஸ்ரீமான் வரதராஜ முதலியார் இவர்கள் இயற்றியது, ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அவச்யம் தெரியவேண்டிய ஆசாரங்களையும், தத்வங்களையும் திரட்டிச் சேர்த்துத் தெளிவாய் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 6.

ஸ்ரீ:

உத்தரவாதமுள்ள
உயர்ரக வைரங்களுக்கும்
பொன்வெள்ளி நகைகளுக்கும்
ஜரிகை பட்டு வேஷ்டிகள்
சேலைகளுக்கும்
ஸ்ரீ ஆண்டாள்
ஜுவெல்லரீஸ் லிமிடெட்,
109, சைனாபஜார் ரோட்,
மதராஸ்.

Printer:— M. K. Parthasarathi Iyengar,
Sri Komalamba Press, Kumbakonam.
Edited and Published at Srirangam by A. V. Gopalachariar,
for the Sri Desika Srisukthi Samrakshana Sabha, Srirangam.